www.tamilarangam.net


# களத்தில்

நாம், எமது தாயக மண்ணை எமது உயிரிலும் மேலாக நேசிக்கிறோம். எமது தாயக தேசம் எமது இனத்தின் உயிருக்கு நேரானது. அந்த மண்ணைப் பாதுகாப்பது எமது இனத்தின் ஆன்மாவைப் பாதுகாப்பதற்கு நிகரானது.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

(29.07. 1998 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (166) அன்பளிப்பு: 60 p


# மாங்குளத்தை கைப்பற்றும் சிறிலங்காவின் புதிய முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிப்பு

## ★ முப்பதுக்கு மேற்பட்ட சிறிலங்காப் படையினர் பலி
## ★ நான்கு போராளிகள் தாயகம் காத்து வீரச்சாவு


சிறிலங்கா அரசாங்கம் மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான புதிய முயற்சி ஒன்றில் ஜெயசிக்குறுய் களத்தில் 26ம் திகதி ஞாயிற்றுக் கிழமை தனது படைகளை ஈடுபடுத்தியது. ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பதிலடித் தாக்குதலில் நிலை குலைந்த சிறிலங்காப் படைகள் முப்பதுக்கு மேற்பட்ட தனது படையினரை இழந்த நிலையில் காயப்பட்ட ஏராளமானவர்களுடன் ஆயுதங்கள் பலவற்றையும் பறிகொடுத்து தமது தரப்பில் இறந்த 5 உடல்களையும் போட்டுவிட்டு பழைய நிலைகளுக்குப் பின் வாங்கிச் சென்றனர் என இப்பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

26 ம் திகதி ஞாயிறு காலை 11.30 க்கு சிறிலங்காப் படைகள் மாங்குளம் நோக்கி நகர்வதற்கான தனது முயற்சிகளை மோட்டார்கள் ஆட்டிலறிகள் தாக்குதல் நடத்த டாங்கிகள் சகிதம் ஆரம்பித்தனர். இதனால் காலை 11.30 மணி முதல் மதியம் 3.45 மணி வரை விடுதலைப் புலிகளுடன் கடும் சண்டை நிகழ்ந்தது. விடுதலைப் புலிகளின் வீராவேசப் பதிலடித் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாது பெரும் இழப்புக்களுடன் சிறிலங்காப் படைகள் பழைய நிலைக்கு திரும்பியதையடுத்து ஏ.கே. எல்.எம்.ஜி 4, ஆர்.பி.ஜி 1, மற்றும் துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், 5000க்கும் மேற்பட்ட ரவைகள் இராணுவ உபகரணங்கள் என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாயகம் மீதான ஆக்கிரமிப்பை முறியடித்த விடுதலைப் புலிகளின் இவ்வெற்றிகரமான எதிர்த் தாக்குதலில் நான்கு போராளிகள் வீரச் சாவெய்தியுள்ளனர்.

## யாழ் சின்னக்கடை பொலிஸ் இராணுவக் கூட்டுமுகாம் அழிப்பு

தொடர்ச்சி 4 ம் பக்கம்.....



ஆறு- மலை - காடு - வயல் - இவர்களது பாதச்சுவடுகளின் குணம் அறியும் !

## தமிழ்ப் பத்திரிகையாளர்கள் இராணுவ இலக்காக்கப்படும் கொடுமை

சிறிலங்கா அரசாங்கம் தமிழ்ப்பத்திரிகையாளர்களை இராணுவ இலக்காக்கி தன் கடும் பத்திரிகைத் தணிக்கையையும் தாண்டி தமிழர்கள் குறித்த செய்திகள் வெளியுலகிற்கு தெரிய வராதவாறு தடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

வீரகேசரி தமிழ் நாளிதழின் பத்திரிகையாளர்களான பி. மாணிக்கவாசகம் , சிறிகஜன் ஆகிய இரு தமிழ்ப் பத்திரிகையாளரும் சிறிலங்கா படையினரால் காரணமின்றி கைதாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் செய்தித் தணிக்கையாளர்களுக்கு கட்டுப்பட்ட நிலையிலேயே தங்கள் கடமைகளைச் செய்து வந்த போதிலும் காரணமின்றி கைது செய்யப் பட்டுள்ளனர்.

முதலில் வீரகேசரி அலுவலகத்திலிருந்து இரவு உணவு வாங்கவென வெளியே சென்ற சிறி கஜனைக் கைதாக்கிய சிறிலங்கா படையினர் நாலு நாள் இடைவெளியில் வவுனியாவில் மாணிக்கவாசகத்தைக்

தொடர்ச்சி 2 ம் பக்கம்.....

## உலகெங்கும் தமிழின அழிப்பு கறுப்பு யூலையின்15 வது ஆண்டு

○ கனடிய தேசக்கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டு கனடிய மக்கள் அஞ்சலி செலுத்தினர்

இலங்கைத் தீவில் 1983 ஆடியில் சிறிலங்கா அரசாங்கத்தின் ஆதரவுடன் நடாத்தப்பட்ட தமிழின அழிப்பு, மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களின் உயிர்களைக் குடித்து - பல்லாயிரம் தமிழ் மக்களினை அகதிகளாக்கி கறுப்பு யூலை என உலக வரலாற்றில் குறிப்பிடப்பட்டு வருகிறது. இவ் இனப்படு கொலைகளின் 15 வது ஆண்டு உலகெங்கும் இம் மாதம் 25ம் திகதி நினைவு கூரப்பட்டது.

தமிழர்களுடைய வீடுகளை வியாபார நிலையங்களை தொழில் நிறுவனங்களை எரித்தழித்து அவர்களுடைய கோவில்கள் தெய்வத் திருவுருக்கள் வழிபாட்டுத் தலங்கள் எல்லாவற்றையும் உடைத்தழித்து பொருளாதார - கலாச்சார உரிமைகள் கூட தமிழர்களுக்கு இல்லை என சிங்களப் பேரினவாதிகள் வன்முறைகள் மூலம் வெளிப் படுத்தியதனால் ஏற்படுத்தப்பட்ட இனங்காணக்கூடிய அச்சத்தாலேயே உலகெங்கும் தமிழீழ மக்கள் அரசியல் தஞ்சம் கோரிப் புறப்பட்டனர் என்பது வரலாறு. இதனால் எங்கெல்லாம் தமிழீழ மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் கறுப்பு யூலை அவர்களால் தேசியத் துக்க நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் அன்று என்ன நோக்குக்காக என்ன விதமாகத் தமிழர்களை சிங்களப் பேரினவாத சிறிலங்கா அரசாங்கம்

தொடர்ச்சி 4 ம் பக்கம்.....

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



நேற்று என்பது அனுபவங்களின் தொகுப்பு. இன்று என்பது அந்த அனுபவங்களின் அடிப்படையில் இயங்கும் தளம். நாளை என்பது இன்றினால் உருவாக்கப்படும் காலம். இதனையே கறுப்பு யூலையாக சிங்களப் பேரினவாதிகளால் மாற்றப்பட்டு விட்ட ஆடி மாதம், தமிழர்களுக்கு நினைவூட்டி நிற்கின்றது.

ஆம்! 1983 ஆடி 23 முதல் 27 வரை சிறிலங்கா அரசின் ஆதரவுடன் நடாத்தப்பட்ட தமிழின அழிப்புப் படுகொலைகள் உலக வரலாற்றில் மனிதாயத்திற்கே சவால் விட்ட சரித்திர நிகழ்ச்சிகளாகும். இந்த அனுபவங்களின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையினால் 1983ல் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தமிழீழ மக்கள் தேசஇனம் என்ற வரலாற்று உண்மை ஏற்கப்பட்டு தமிழீழ மக்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அன்றே இலங்கைத் தீவில் சிறிலங்கா அரசாங்கம் செய்து வரும் பகிரங்கத் தமிழின அழிப்பு நடவடிக்கைகள் முற்றுப் பெற்றிருக்கும். இதனால் தமிழீழ மக்கள் என்னும் உலகின் பழங்குடிகளுள் ஒரு குடியினை சிறிலங்கா தொடர்ச்சியாக இன அழிப்புக்குள்ளாக்கும் சர்வதேசக் குற்றச்செயலுக்கு உலக நாடுகளும் உலக அமைப்புக்களும் அவை அறிந்தோ அறியாமலோ உடந்தையாக இருக்கின்றன என்பது அர்த்தமுள்ள குற்றச்சாட்டாக உள்ளது. இத்தகைய செயற்பாடுகளால் 1983ல் சில ஆயிரமாக இருந்த சிறிலங்கா நடாத்திய தமிழர் இனக் கொலைகளின் தொகை இன்று நூறாயிரத்தை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல எந்தச் சர்வதேச சட்டங்களையும் மீறிவிட்டு அதனை சர்வதேச உலகத்தின் முன்னால் நியாயப்படுத்தலாம் என்னும் அசட்டுத் தைரியத்துடன் சிறிலங்கா மேலும் மேலும் மனிதாயத்திற்கு எதிரான குற்றங்களிலும் - யுத்தக் குற்றச் செயல்களிலும் வேகமாக ஈடுபட்டு வருகிறது.

1983ல் தமிழ் இன அழிப்பு நடைபெற்ற பொழுது 53 பிரித்தானிய பாராளமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு அது குறித்து சிறிலங்கா அரசாங்கம் விசாரணை நடாத்த வேண்டுமெனக் கேட்டனர். இன்று வரை ஏதாவது நடந்ததா? தமிழீழ மக்கள் மட்டுமல்ல அந்த 53 பிரித்தானிய பாராளமன்ற உறுப்பினர்களும் சிங்கள பௌத்த பேரினவாதத்தினால் அலட்சியப்படுத்தப்பட்டனர் என்பதையே உலக வரலாறு தனது பதிவாக கொண்டுள்ளது. நவாலித் தமிழ் அகதிகள் படுகொலை செய்யப்பட்ட பொழுது பிரித்தானியாவைத் தலைமையகமாக கொண்டியங்கும் கவோட் என்னும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் பிரித்தானிய பாராளுமன்ற வெளியுறவுச் செயலருக்கு சிறிலங்கா சர்வதேச யுத்த விதிகளை மீறி வருகிறது எனக் குறிப்பனுப்பியது. ஆனால் அன்று முதல் இன்று வரை சிறிலங்கா சர்வதேச யுத்த விதிகளை மட்டுமல்ல பொன்விழாக் கொண்டாடும் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தையே பகிரங்கமாக வன்முறைப்படுத்தி வருவது தான் நடைமுறை யதார்த்தமாக உள்ளது. மேற்கூறியவை சிறிலங்கா நாளும் பொழுதும் சர்வதேச சட்டங்களைப் பற்றி எவ்வித அக்கறையுமின்றி நடாத்தி வரும் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு இரு சிறு உதாரணங்களே.

சிறிலங்கா தவிர்ந்த உலகில் எந்த நாட்டிலாவது, அந்நாட்டின் மக்கள் தொகுதி ஒன்று உணவு- இல்லிடம்- மருந்துகள் வழங்கப்படாது வதைக்கப்படுவதினை-குண்டுகளால் குளிப்பாட்டப்படுவதை-



# இதுவா அரசாங்கம்

பள்ளி மாணவிகள் முதல் பல குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய்மார் வரை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு பகிரங்கமாக இனக்கொலை செய்யப்படுவதை-அவர்களது தாயகத்திலேயே பெரும் எண்ணிக்கையில் காணாமல் போவதை- வகைதொகையின்றி கைதாக்கப்பட்டு நீதி விசாரணையின்றி சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதைக் - காட்ட முடியுமா? இப்படியான செயல் திட்டங்களையே தனது அரசியல் செயற்திட்டமாக கொண்டு செயற்படும் ஒரு அரசாங்கத்தை அம்மக்களின் அரசாங்கம் என எவ்வாறு அழைக்க முடியும்? இது ஜனநாயகத்தை மட்டுமல்ல சர்வதேச ஒழுங்கையே கேலிக் கூத்தாக்கும் கேவலமான நிகழ்வு அல்லவா? இதனை தட்டிக்கேட்பதில் சர்வதேச அமைப்புக்கள் காட்டும் தாமதங்களே 300, 400 மனிதர்கள் புதைக்கப்பட்ட மரணக்குழிகள் பல தமிழீழ மண்ணில் தோன்றக் காரணமாகின்றன. பல நூறாயிரம் குழந்தைகள் ஊட்டச் சத்தின்றி மூளைப் பலமின்றி கல்வி கேள்வி அற்றவர்களாக வாட்டி வதைக்கப்பட காரணமாகின்றன. இதனாலே ஒரு தேசமே குண்டுகளால் சல்லடை போடப்பட்டு அதனுடைய இயற்கை அரண்கள் - இயற்கை வளங்கள் எல்லாமே அழித்தொழிக்கப் படுகின்றன. அங்கு வாழும் அப்பாவி மக்களின் தொழில் முயற்சிகள், பொருளாதார செயற்பாடுகள்- தனிமனித சுதந்திரங்கள் எல்லாமே ஆயுத முனையினால் நிர்ணயிக்கப்படக் கூடிய பரிதாபநிலை மக்கள் மீதான இராணுவ முற்றுகைகளாலும் பொருளாதாரத் தடைகளினாலும் துடிதுடிக்க வைக்கப்படுகின்றனர். இவைகளைத் தான் தேசிய பிரச்சினை ஒன்றுக்கு கடந்த கால் நூற்றாண்டிற்கும் மேலாக தீர்வாக முன்வைக்கும் ஒரு அரசாங்கம் எந்த சர்வதேச விதிகளுக்கு கீழ் அம்மக்களின் அரசாங்கமாக இருக்க முடியும்? இனஅழிப்பு ஒன்றையே தனது அரசியல் செயற்திட்டமாக கொண்ட ஒரு அரசாங்கம், தனது இராணுவம் ஏற்படுத்திய மரணக்குழிகள் குறித்து நீதியான சுதந்திரமான விசாரணை நடாத்துமென எதிர்பார்ப்பதோ அல்லது சுதந்திரமாக எழுதும் பத்திரிகையாளர்களை சிறிலங்காப் படையினர் தமிழர்கள் என்பதற்காக கைதாக்கிச் சித்திர வதைப்படுத்துவதை தடுக்கும் என நினைப்பதோ அர்த்தமற்ற ஒன்று. அதே வேளை நாளும் பொழுதும் ஆக்கிரமிப்பு அரசாங்கத்தினதும் அதன் படைகளினதும் இனஅழிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணங்கள் அளிக்கப்படுவதையும் தடுத்தாலே தனது இனஅழிப்பு இலக்கு பூர்த்தியாகும் என்பதில் சிறிலங்கா மிக நுட்பமாகச் செயற்பட்டுவருகிறது. நிவாரண வெட்டு என்னும் பெயரில் தமிழ் மக்களுக்கான அத்தியாவசிய பொருட்களின் வழங்கலை சிறிலங்கா மேலும் குறைத்துள்ளமை சமீபகாலச் செய்தி. இதே நேரத்தில் ஆயுதங்களும் வான் படைக்குத் தேவையானவைகளும் வாங்கிக் குவிப்பதற்கு சிறிலங்கா தாராளமாகப் பணத்தை வாரியிறைத்துள்ளமையும் சமீபகால உண்மை. பெருமளவில் ஆளணிக் குவிப்புடன் ஆரம்பமான ஜயசிக்குறுய் அளித்து வரும் படுதோல்விகளால் மனந் தளர்ந்து தவிக்கும் தனது படைகளுக்கு உற்சாகமூட்டுவதற்காக துரித கெதியில் வான்படைக் கருவிகள் நவீன ஆயுதங்களையும் சிறிலங்கா பெற்றாலும் இவைகளும் முன்னையவை போல விடுதலை புலிகளால் கைப்பற்றப்படவோ- அழித்தொழிக்கப்படவோ சாத்தியங்கள் பிரகாசமாக உள்ளன என்பதே சிறிலங்கா ஆய்வாளர்களின் ஏக்கமாக உள்ளது.

இந்நிலையில் சிறிலங்கா என்னும் ஆக்கிரமிப்பு அரசாங்கத்தின் படைகளே விரட்டியடிப்பது ஒன்றினால் மட்டுமே தமிழீழ மக்கள் தமது தாயகத்தை மீட்டு மீண்டும் கறுப்பு ஜூலை செயற்திட்டங்களால் தமிழ் மக்களை அழிப்பதைத் தடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். அவர்களது நீதியான நேர்மையான போராட்டத்தினை உலகுக்கு விளக்கும் தூதுவர்களாக அவர்களது போராட்டத்திற்கு உதவ வேண்டிய துணையாளர்களாக புலம்பெயர் தமிழர்களாகிய நாம் உள்ளோம். இந்த இரு பெரும் பொறுப்பையும் நாம் எவ்வளவு விரைவாகச் செய்கின்றோமோ அவ்வளவு விரைவில் நம் தாயகம் உலகால் அங்கீகரிக்கப்பட்டு எம் மக்களுக்கு பாதுகாப்பான அமைதி திரும்பும். ★

## தமிழ்ப் பத்திரிகையாளர்கள்.....

கைதாக்கினர். தமிழ் மக்கள் நாளாந்த வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்னல்களில் சிலவற்றைக் குறித்து இவர்கள் செய்திக்கட்டுரைகள் எழுதியமைக்கே இவர்களுக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறி கஜன் கைது செய்யப்படுவதற்கு முன் தென் தமிழீழத்தில் சிறிலங்கா நடாத்திவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் குறித்தும் பட்டதாரி மாணவர்கள் நடாத்திய ஜனநாயக போராட்டத்தினை இராணுவ பலம் கொண்டு நசுக்கியமை குறித்தும் கட்டுரைகள் எழுதியிருந்தார். மாணிக்கவாசகர் வன்னியில் மக்கள் இராணுவ நடவடிக்கைகளாலும் சிறிலங்காவின் உணவு மருந்துத் தடைகளாலும் படும் இன்னல்களை குறித்து கட்டுரை எழுதியிருந்தார். இதனால் இப்பத்திரிகையாளர்களின் கைது உலகின் கருத்துச் சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட சிறிலங்காவின் சவாலாக அமைகிறது.

இவர்கள் கைதாக்கப்பட்டமை குறித்து உலக பத்திரிகையாளர் அமைப்புக்கள் சிறிலங்காவுக்குத் தமது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன. பிரான்சில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு என்னும் அரசசார்பற்ற பத்திரிகையாளர் அமைப்பு இரு தடவைகள் சந்திரிகா பண்டார நாயக்காவுக்கு இவர்களின் கைது குறித்து கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. பிரித்தானியாவை மையமாக கொண்டியங்கும் பொது நலவாய நாடுகளின் பத்திரிகையாளர் சங்கமும் சிறிலங்காவின் செய்தித் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு கண்டனக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. இவ்வாறு உலக அரசசார்பற்ற அமைப்புக்கள் குரல் கொடுப்பதைத் தடுக்கும் நோக்கில் சிறிலங்காவின் செய்தித் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர இவர்கள் இருவரும் பத்திரிகைகளில் எழுதிய எழுத்துக்களுக்காக கைதாக்கப்படவில்லை-இவர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடை தொடர்புகள் இருந்தமையினாலேயே சாதாரண குடிகள் என்ற வகையில் கைதாக்கப்பட்டனர் என புதிய விளக்கம் ஒன்றை அளித்துள்ளார்.

தமிழர்கள் எல்லோரையுமே விடுதலைப்புலிகள் என அரசாங்கம் சந்தேகிக்கிறது என்றால் தமிழர்கள் தான் விடுதலைப் புலிகள்- விடுதலைப்புலிகள் தமிழர்களின் தேசிய விடுதலை இயக்கம் என்ற உண்மையை மட்டும் ஏற்க மறுத்து ஏன் தமிழர்களுக்கு எதிரான யுத்தம் ஒன்றை நடாத்தி ஒரு தேசஇனத்தையே இன அழிப்பு செய்ய முயல்கிறது என சர்வதேச தமிழ் பத்திரிகையாளர் ஒருவர் கேட்டுள்ளார். ★

## உங்கள் தொடர்புகட்கு

**AUSTRALIA**
TCC
P O Box 375
Preston
Victoria 3072

**CANADA**
WTM
64 Eaton Avenue
Toronto
Ontario M4J 2Z5

**DENMARK**
LTTE
P.O.Box 47
7400 Herning

**FRANCE**
TCC
341 Rue Des Pyrenees
75020 Paris

**GERMANY**
TCG
Postfach 340251
51624 Gummersbach.

**ITALY**
TCC
Via Mariano Stabile - 49
90139 Palermo

**NETHERLANDS**
TCC
Grt. Hertoginnelaan-106
2517 EL Den Hagg

**NORWAY**
TCC
P.O.BOX 1699 Vika
0110 Oslo

**SWEDEN**
TCC
Glomminge Grand-25
3rd Floor
16362 Spanga

**SWITZERLAND**
WTTC
Joses Str - 110
8005 Zurich

**UNITED KINGDOM**
UTO
Eelam House
202 Long Lane
London SE1 4QB

**U.S.A**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L
Jamaica
New York 11432.

www.tamilarangam.net



# பல முனைகளில் தொடர் தாக்குதல் ஜயசிக்குறுவின் புதிய தந்திரோபாயம் !

யூன் மாத முதற் பகுதியில் இடம்பெற்ற நான்கு நாள் தொடர்ச்சியான பலத்த சண்டைகளின் பின்னர் வன்னிப் போர்க்களம் சற்று ஓய்ந்துள்ளது. ஆனால் இது நிரந்தரமானதல்ல. எப்பொழுது வேண்டுமானாலும் கடும் மோதல்கள் வெடிக்கலாம் என்ற எதிர்பார்க்கையே வன்னிப் போர்க்கள நிலை உள்ளது.

யூன் மாத முற்பகுதியில் இடம்பெற்ற இக்கடும் சண்டைகள் அதற்கு முதல், அதாவது மே 28ம் திகதி இடம்பெற்ற மோதலின் தொடர்சம்பவமே ஆகும். ஏனெனில் மே 28 இல் ஆரம்பித்த நடவடிக்கையுடன் இணைந்ததாகத் திட்டமிட்ட இவ் இராணுவ நடவடிக்கைகள் எதிர்பாராத பின்னடைவினால் மீண்டும் ஒரு வாரத்தின் பின் ஆரம்பிக்கப்பட்டது எனலாம்.

ஜயசிக்குறு படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தி ஆகிவிட்ட நிலையில், இப்படை நடவடிக்கையை விரைவிலேயே முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என இராணுவத் தரப்பும்– அரச தரப்பும் தீவிர அக்கறை கொண்டிருந்தன. இதற்கென புதிய இராணுவ தந்திரோபாயத்திலும் அக்கறை காட்டப்பட்டது.

இந்த வகையில், மே 28ம் திகதி இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது அது தொடர்ச்சியான பல நகர்வுத் திட்டங்கள் பலவற்றைக் கொண்டிருந்தது. இந்த நகர்வுத் திட்டங்களானது விடுதலைப் புலிகளுக்கு பல முனைகளில் அழுத்தம் கொடுப்பதாகவும் – அதேசமயம் அவர்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணுவதாக இருந்ததோடு சில கேந்திர நிலைகளைக் கைப்பற்றும் நோக்கம் கொண்டதாகவும் இருந்தது.

இராணுவம் வகுத்த இந்த தந்திரோபாயமானது, மண் பானையில் ஓட்டையையோ வெடிப்பையோ கண்டறிவதற்கு அதனைச் சுற்றிச் சுற்றிச் சுண்டிப்பார்ப்பது போன்றதாக இருந்தது. அதாவது புலிகளின் பாதுகாப்பு அரண்களில் எப்பகுதிகளில் ஓட்டைகள் உள்ளனவோ அவற்றிற்கு ஊடாக நுழைதல் அல்லது புகுந்துவிடுதல் என்பதைக் குறியாகக் கொண்டிருந்தது.

முதலில் மே 28 இல் நடவடிக்கையை ஆரம்பித்த இராணுவம் பழைய கண்டி வீதியில் உள்ள அம்பகாம கிராமத்து – சந்தியைக் குறியாகக் கொண்டது. அடர்ந்த காட்டின் ஊடாக அம்பகாமத்திற்கு கிழக்கே பல கிலோ மீற்றர் தொலைவின் ஊடாக நகர்ந்து– அம்பகாமத்தின் பின்புறத்தை–அதாவது வடபகுதியை அடைவதன் மூலம் புலிகளை அதிர்ச்சிக்கு ள்ளாக்கி அப்பகுதியைக் கைப்பற்றிக் கொள்வதே நோக்கமாகக் கொண்டது. இது புலிகளின் பாதுகாப்பு நிலைகளுக்கு பின்புறமாகத் தாக்குவதன் மூலம் புலிகளை நிலைகுலையச் செய்து அம்பகாமம் பகுதியைக் கைப்பற்றிக் கொள்ளுதல் ஆகும்.

இவ்வாறு அம்பகாமம் பகுதியைக் கைப்பற்றிக் கொள்ளுதல் மூலம் புலிகளின் தரப்பில் பலத்த குழப்பங்களை உருவாக்கும் என இராணுவத் தரப்பினால் கருதப்பட்டது. இதில் முக்கியமானதாக – இராணுவம் பழைய கண்டி வீதியினூடாக நகர முற்படுகின்றதா என்ற கேள்வியைப் பலமாக உருவாக்குதல் ஆகும். இதன்மூலம் பிரதான


**இராணுவ நகர்வுகளின் இலக்கு குறித்து பல கற்பிதங்களை உருவாக்கக் கூடிய நகர்வுகளைச் செய்வதன் மூலம் புலிகளின் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணும் அதேவேளை – முக்கிய கேந்திர நிலைகளை மாறி மாறித் தாக்குவதும் – கிடைக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தி புலிகளின் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளை ஊடறுத்து உட்புகுவதன் மூலம் புதிய பகுதிகளை ஆக்கிரமித்துக் கொள்வதும் ஜயசிக்குறுவின் புதிய தந்திரோபாயமாகும்.**

வீதியில் தனது படையணிகளை நிறுத்தி வைத்தல் குறித்து புலிகள் பரமாகச் சிந்தனை செய்ய வேண்டியும், குழப்பத்திற்கு உள்ளாக வேண்டியும் வரும் எனவும் இராணுவத் தரப்பு எதிர்பார்த்தது.

ஆனால், எதிர்பார்த்தது போன்று அம்பகாமம் பகுதி நோக்கிய நகர்வு வெற்றி பெறவில்லை. இது இராணுவத் தரப்பிற்கு பலத்த இழப்பை மட்டுமல்ல, குழப்பத்தையும் ஏற்படுத்தியது எனலாம். அதாவது இராணுவம் எதிர்பார்த்ததற்கு மாறாக புலிகளின் அவதானிப்பு நீண்ட தொலைவிற்கு உள்ளது என்பது இதன்மூலம் வெளிவந்தது. இந்த நிலையில் ஆரம்பத்தில் திட்டமிட்டவாறு இராணுவத்தால் அடுத்த கட்ட முயற்சியை மேற்கொள்ள முடியவில்லை.

ஆயினும், ஒரு வார கால தாமதத்தின் பின்னர் அடுத்த கட்ட நகர்வை யூன் 4ம் திகதி கிளிநொச்சியில் இராணுவம் மேற்கொண்டது. இந் நகர்வு முயற்சியானது அம்பகாமத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி போன்றதல்லாது – நேரடியான மோதலாக இராணுவம் ஆரம்பித்தது. புலிகளின் நிலைகளை ஊடறுத்து உட்புகுந்து ஏற்கனவே கடந்த பெப்ரவரியில் புலிகளிடம் பறிகொடுத்த பிரதேசத்தைக் கைப்பற்றுவதே இதன் குறிக்கோளாகும்.

**மண்பானை ஒன்றில் ஓட்டையையோ வெடிப்பையோ கண்டறிவதற்கு சுற்றிச் சுற்றிச் சுண்டிப்பார்ப்பது போன்றதே அண்மைக் காலத்தில் இராணுவம் மேற்கொண்ட யுத்த தந்திரோபாயமாகும். அதாவது எந்தப் பலவீனமான பகுதி காணப்படுகின்றதோ அதன் ஊடே புகுந்து கொள்ளுதல் ஆகும்.**




இராணுவத்தின் நகர்வு முயற்சிகள்

இந் நடவடிக்கை மூலம் புலிகளுக்கு பெரும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்துவது மட்டுமல்ல, ஜயசிக்குறு நடவடிக்கை இரு எதிர் எதிர் முனைகளில் இருந்தும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்ற தோற்றப்பாட்டை உருவாக்குவதும் இராணுவத்தின் குறியாக இருந்தது.

ஆனால், கிளிநொச்சியிலும் இராணுவம் எதிர்பாராத அளவில் புலிகளின் பதிலடி நடவடிக்கை இருந்தது. மே 28ல் இருந்து யூன் 8ம் திகதி வரை இடம்பெற்ற மோதல் சம்பவ ங்களில் யூன் 4ல் கிளிநொச்சியில் இடம்பெற்ற மோதலே உக்கிரமானதாகவும் கடுமையானதாகவும் இருந்தது.

புலிகளின் சில நிலைகளை ஊடறுத்து புகுந்த சிறிலங்கா இராணுவம் புலிகளின் உக்கிரமான பதிலடியினால் பலத்த உயிரிழப்பைச் சந்திக்க வேண்டி வந்தது. ஆரம்பத்தில் இச்சண்டையில் 200க்கும் மேற்பட்ட இைாணுவத்தினர் கொல்லப்பட்டும் 400 பேர் காயமடைந்தமையும் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவலாக வெளிவந்திருப்பினும் அதன் பின்னர் வெளியான அரச தரப்பு தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிட்டால் இழப்பின் தொகை இன்னும் அதிகமானதாக இருக்கும் என்றே கணிப்பீடு செய்யக் கூடியதாக உள்ளது. இது கடந்த டிசம்பரில் மன்னகுளத்தில் இராணுவம் பெற்ற அடிக்கு அடுத்த பெரிய அடியாக இருந்தது எனலாம்.

இவ்வாறு கிளிநொச்சியில் ஏற்பட்ட இழப்பானது சந்திரிகா அரசினை இராணுவ யுத்தச் செய்திகளுக்கு தணிக்கையைக் கொண்டு வரும் நிலை வரைக்கும் கொண்டு சென்றது. அரசாங்கத் தரப்பு அவசர அவசரமாகக் கொண்டு வந்த இச் செய்தித் தணிக்கைக்கு என்ன காரணங்களைக் கூறிக்கொண்டாலும் இதனை எவருமே ஏற்றுக் கொள்வதாக இல்லை.

ஆனால், கிளிநொச்சியில் பலத்த அடி வாங்கியபோதும் இராணுவத் தலைமை தனது அடுத்த கட்ட நகர்வைக் கைவிடவில்லை. அடுத்த நாள் அதாவது, யூன் 5ம் திகதி அம்பகாமம் நோக்கி கிழக்கு மேற்காக இரு நகர்வு முயற்சிகளை மேற்கொண்டது. ஆயினும் இந் நகர்வு முயற்சிகளும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அடுத்த நாள் மாங்குளம் நோக்கி அதன் தென் கிழக்கிலிருந்து நகர்வு முயற்சி இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டது. இம்முயற்சியானது புதிய தந்திரோபாயத்தின் மற்றுமோர் அங்கமாகும். ஏனெனில் மூன்றாவது மையத்தில் தொடங்கப்பட்ட நடவடிக்கையாக இது இருந்தது.

அதாவது, அம்பகாமம் –கிளிநொச்சி என்பவற்றிற்கு அடுத்ததாக மாங்குளம் நோக்கியதாக இது இருந்தது. இது ஜயசிக்குறு நடவடிக்கையை நகர்த்திச் செல்வதற்கான சகல கேந்திர நிலைகளையும் இராணுவம் தாக்குவது போன்றதானதொரு நிலையை உருவாக்குவதாக இருந்தது. ஆனால் இம்முயற்சியும் விடுதலைப் புலிகளின் பதிலடியினால் முறியடிக்கப்பட்டது.

ஆயினும், அடுத்த இராணுவம் புதிய முயற்சிகளை மேற்கொண்டது. அம்பகாமம் – மாங்குளம் பகுதிகள் மீது தாக்குதலைத் தொடுத்தது. ஆனால் புலிகள் இவ்விரு பகுதிகளிலும் இராணுவத்தை எதிர்கொண்டு இராணுவத்தினரின் முயற்சிகளை முறியடித்தனர்.

இத்தொடர் நடவடிக்கையின் இறுதித் தாக்குதலை அடுத்த நாள் இராணுவம் கிளிநொச்சியில் மேற்கொண்டது. இதற்கு முன்னர் கிளிநொச்சியில் மேற்கொண்ட தாக்குதலை ஒத்ததாகவே இருந்த இத் தாக்குதலானது – ஏறத்தாழ அதை ஒத்ததான ஒரு பதிலடியையே விடுதலைப் புலிகளிடம் பெற்றுக் கொண்டது.

இந்த வகையில் ஓராண்டு நிறைவின் பின்னர் ஜயசிக்குறு துருப்புகள் மெற்கொண்ட் புதிய நகர்வு முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன. இது ஜயசிக்குறு நடவடிக்கைக்கென வகுக்கப்பட்ட புதிய தந்திரோபாயத்தைக் கேள்விக்குள்ளாக்கும் நிலைவரையிலும் கொண்டு சென்றுள்ளது. அதாவது இராணுவத்தின் நடவடிக்கையின் நோக்கம் குறித்து புலிகளுக்கு குழப்பத்தை உண்டுபண்ணுவதோடு பல முனைகளில் தாக்குதலை ஆரம்பித்தல் மூலம் புலிகளின் பலத்தை சிதறடித்தல் என்ற தந்திரோபாயம் தோல்விக்கு உள்ளானது எனலாம்.

இப் புதிய நகர்வு முயற்சியின்போது அம்பகாமம் நோக்கியதாக மூன்று தடவையும் மாங்குளம் நோக்கியதாக இரண்டு தடவையும் கிளிநொச்சி நோக்கியதாக இரண்டு தடவையும் நகர்வு முயற்சிகளை மேற்கொண்டது. மறுவளமாகக் கூறுவதனால் இன்று யுத்தகளப் பிரதேசத்திலுள்ள மூன்று கேந்திர நிலைகளையும் இராணுவம் ஏழு தடவைகள் இக்காலப் பகுதிக்குள் தாக்கியுள்ளது. இதில் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட இரு தாக்குதல்களையும் தவிர மற்றைய தாக்குதல்கள் அனைத்தும் வெவ்வேறு முனைகளில் நடத்தப்பட்டவையாகும்.

ஆனால், இதில் இராணுவம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை என்பது மட்டுமல்ல, எதிர்பாராத வகையில் இழப்புக்கைளையும் சந்திக்க வேண்டி வந்தது. ஒட்டுமொத்தமாக 5 தினங்கள் நடந்த இச்சண்டையில் மட்டும் 1500க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயமடையவேண்டி வந்ததென பாராளுமன்றத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஒப்புக் கொள்ள வேண்டிய அளவிற்கு நிலைமை இருந்தது. இதன் மூலம் புதிய தந்திரோபாயத்தின் மற்றொரு அங்கமாக இருந்த இராணுவ ஆளணி இழப்பைக் குறைத்தல் என்ற

– ஜெயராஜ் (தமிழீழம்) –

குறிக்கோளுக்கும் புலிகள் பலமான அடி ஒன்றைக் கொடுத்தனர். இதேசமயம், 400க்கும் அதிகமான இராணுவத்தினரை பலிகொடுத்துவிட, 1500க்கும் மேற்பட்ட இராணுவத்தினருக்கு காயங்களையும் உண்டாக்கிய இப்புதிய தந்திரோபாயமானது ஜயசிக்குறு நடவடிக்கையை ஓரளவேனும் முன்நகர்த்த உதவவில்லை என்பது மிக முக்கியமானது. ஆகையினால் ஜயசிக்குறு நடவடிக்கையானது மேலும் புதிய தந்திரோபாயங்களை வெண்டி நிற்பது தவிர்க்க முடியாததொன்றாகவே மாறிவிட்டது. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## யாழ்குடா நாட்டில்
# வாழவசதியற்ற பரிதாபநிலையில் 19190 பெண்கள்
### சிறிலங்காவின் முதல் பெண் ஜனாதிபதி
### தமிழ்ப் பெண்களை அழிப்பதில் முன்னணி வகிக்கின்றார்

**யாழ்** குடா நாட்டை ஆக்கிரமித்து தமிழ் மக்கள் மீது சிறிலங்கா நடத்தி வரும் இராணுவ நடவடிக்கைகளால் வாழவசதியற்ற நிலையில் 19190 தமிழ்ப் பெண்கள் தவித்துக் கொண்டிருப்பதாக அண்மையில் வெளியான அரச சார்பற்ற கூட்டமைப்புக்களின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களுக்கு வாழ்வதற்கு வருமானம் வழங்கி வந்த இவர்களின் கணவன் அல்லது தந்தையை சந்திரிகாவின் சமாதான யுத்தம் அழித்தொழித்து விட்டதால் இவர்கள் குடும்பங்கள் பிரதான உழைப்பாளரை இழந்து வாழ வசதியற்று தள்ளாடுகின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களில் தங்கிவாழும் சமூக அமைப்பில் பழக்கப்பட்ட நிலையில், இவர்களால் தனித்து வாழ்க்கை நடாத்த முடியாதவர்களாய்த் துடிப்பதாக புள்ளிவிபரக் கணிப்பீடு மேலும் தெரிவித்துள்ளது.

### வயது ரீதியாக பகுப்பு

இவ்வாறு தவிப்பவர்களில் 6 வயது முதல் 14 வயதிற்குட்பட்டவர்கள் 14 பேர் ,17 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டவர்கள் 836 பேர் , 31 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 6741 பேர் , 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் 11599 பேர் எனவும் புள்ளிவிபரம் சுட்டிக்காட்டியுள்ளது.

### பிரதேச ரீதியாக வகைப்படுத்தல்

பிரதேச வாரியாகவும் பாதிப்புற்ற பெண்களைப் புள்ளிவிபரத் திரட்டு பின்வருமாறு தொகுத்துள்ளது. யாழ்ப்பாணபிரதேச செயலர் பிரிவில் 1700 பெண்களும், கோப்பாய்ப் பிரிவில் 2653 பெண்களும் பருத்தித்துறையில் 1702 பெண்களும் கரவெட்டியில் 1702 பெண்களும் உடுவிலில் 1896 பெண்களும் மருதங்கேணியில் 227 பெண்களும் வேலணையில் 381 பெண்களும் பளையில் 226 பெண்களும் சாவகச்சேரியில் 2709 பெண்களும் நல்லூரில் 2106 பெண்களும் சங்கானையில் 1302 பெண்களும் சண்டிலிப்பாயில் 1423 பெண்களும் ஊர்காவற்துறையில் 558 பெண்களும் தெல்லிப்பளையில் 505 பெண்களும் வாழ வசதிகள் அற்றவர்களாக உள்ளனர் என அப்புள்ளி விபரக் கணக்கெடுப்பு தெரிவிக்கின்றது.

### சிறிலங்கா படைகளேற்படுத்திய வறுமையினால் பரிதாபம்

யாழ்க்குடா நாட்டில் மக்கள் படும் துன்பங்களின் மற்றொரு பிரதிபலிப்பாக தனது மூன்று இளம் பெண்களை கிணற்றில் தள்ளிக் கொலை செய்த எஸ்.விஜயக்குமார் என்பவரை அயலவர்கள் கிணற்றில் இருந்து காப்பாற்றி யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். 19 வயதான பாமினி, 17 வயதான லிங்காதேவி, 15 வயதான தயாளினி ஆகியோரே வறுமை காரணமாக கொல்லப்பட்ட விஜயக்குமாரின் மூன்று புதல்விகள் ஆவர். சிறிலங்கா படைகளின் கட்டுப்பாடுகளினால் விஜயக்குமாரினால் தொழில்கள் எதையும் செய்யமுடியவில்லை எனவும் இவரின் மூத்த மகள் பாமினி வாய்பேச இயலாதவராகையினால் அவருக்குத் திருமணம் செய்து வைக்கவும் முடியாது என விஜயக்குமார் கொண்ட பெருங்கவலையே அவரை விரக்தியடைய வைத்து இவ்வாறான பரிதாப முடிவுக்கு தள்ளியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ★

### மாங்குளத்தை கைப்பற்றும்....

சிறிலங்கா இராணுவத்தின் கடுங்காவலில் உள்ள யாழ்ப்பாண நகரின் மையப் பகுதியான சின்னக்கடையிலுள்ள சிறிலங்கா இர்ணுவ–பொலிஸ் கூட்டு முகாம் மீதும் அதனைச் சுற்றியுள்ள தொடர் இராணுவக் காவல் அரண்கள் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆடி 24ம் திகதி வெள்ளி நள்ளிரவு தாண்டி சிறிது நேரத்தில் 12.20 மணியளவில் ஏக காலத்தில் பெரும் தாக்குதல்களை ஆரம்பித்தனர்.

இதனால் வீழ்ச்சியுற்ற சிங்களப் படைகளின் நிலைகளில் நீண்ட நேரம் தரித்திருந்து அங்கிருந்த ஆர்.பி.ஜி மற்றும் அதற்கான செல்கள். துப்பாக்கிகள், 2500க்கும் மேற்பட்ட தோட்டாக்கள் இராணுவ உபகரணங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

ஐந்துக்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் கொல்லப்பட்டதுடன் பல படையினர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு சிங்களப்படையினர் ஓடித் தப்பித்துக் கொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ★

## உலகெங்கும் தமிழின.....

இனஅழிப்பு செய்ததோ அதே நோக்கில் இன்றும் அதைவிட மிகமிக மோசமான வழிகளில் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் இனஅழிப்பு செய்து 75000 க்கு மேற்பட்ட தமிழருக்கு மரணத்தை விளைவித்து இவ்வின அழிப்பை தொடர்ந்து வருகிறது என்பதை உலக சமுதாயத்திற்கு வெளிப்படுத்தும் தினமாகவும் இத் தினம் தமிழ் மக்களால் கருதப்பட்டு வருகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றியின் விரைவு புலம்பெயர் தமிழர்கள் அதற்கு அளிக்கும் பங்களிப்புக்களிலும் சர்வதேச அங்கீகாரத்தை தேடிக்கொடுப்பதிலுமே தங்கி நிற்கின்ற ஒரு காலகட்டத்தில் இந்த 98 ம் ஆண்டு கறுப்பு யூலை வரலாற்று முக்கியத்துவமானதாக அமைந்தது.

இவ்விரண்டு இலக்குகளிலும் புலம்பெயர் தமிழ் மக்கள் குறிப்பிடத்தக்க வெற்றியினை அடைந்து வருவதின் வெளிப்பாடாக உலகின் பல பாகங்களிலும் குறிப்பாக கனடாவிலும் நடைபெற்ற கறுப்பு யூலை நினைவுகூரல்கள் அமைந்தன. கனடாவில் தமிழீழ மக்களின் துயரத்தில் கனடிய மக்கள் பங்கேற்பதற்கு அடையாளமாக கனடியத் தேசக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டு கனடிய தலைநகர மாநிலமான ஒன்டோரியாவில் உள்ள நிப்போன் நகர உதவி மேயரால் இரங்கலுரை நிகழ்த்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிப்போன் நகர உதவி மேயர் மேதகு ரிச்சர்ட் சேர்லி தமது அஞ்சலி உரையில் , "சிறிலங்காவில் திட்டமிட்ட முறையில் தமிழர்கள் துன்புறுத்தப்பட்டு பயங்கரமான கொடுமைகளை அனுபவிக்கின்றனர். இது உலகின் நீதி முறைமைக்கே அவமானகரமானதாக உள்ளது. 40 வருட கால உள்நாட்டு யுத்தத்தில் சிறிலங்காவில் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை கேட்கும் பொழுது உலகெங்கும் சுற்றிவர வாழும் சமுதாயங்களுக்கு பெரும் கலக்கம் ஏற்படுகிறது." என தமது பேச்சை ஆரம்பித்த உதவி மேயர் ரிச்சர்ட் சேர்லி சிறிலங்கா ஆயுதப்படைகளால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் மனித உரிமை வன்முறைகள் குறித்தும் , சிறிலங்காப் படைகளால் தமிழ்ப் பாடசாலை மாணவிகளும் பெண்களும் பாலியில் வல்லுறவுகளுக்கு உள்ளாக்கப்படும் கொடுமைகள் குறித்தும் தமது அதிருப்தியையும் கனடிய மக்களின் கண்டனங்களையும் தெரிவித்தார். இத்தகைய கொடுமைகளால் தமிழ் மக்கள் தமது பாரம்பரிய கலாச்சார தாயகத்தினை முன்னேற்ற முடியாமல் இருப்பதற்கு தமது கவலையைத் தெரிவித்த அவர் உலகில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமது தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை உலகுக்கு எடுத்துரைத்து உலகின் தொடர்பு சாதனங்களுக்கு தகவல்கள் உரிய நேரத்தில் கிடைக்கச் செய்ய வேண்டும் எனத் தாம் வேண்டுகோள் விடுப்பதாகவும் கூறினார். அவர் மேலும் பேசுகையில் "அநீதிகளையும் கொடுமைகளையும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. உலக சமுதாயம் அவைகளை அவதானித்து தகுந்த பதில் நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமே அவற்றை இல்லாதொழிக்க முடியும். ஆதலால் துன்புறும் தமிழர்கள் மேல் உடன் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. புலம்பெயர் தமிழ் மக்களாகிய நீங்கள் இன்று தமிழின அழிப்பினால் உயிரிழந்தவர்களுக்காக இங்கு ஏற்றி வைத்த சுடர் விளக்குகள் நாம் இது குறித்து பொறுப்பான விதத்தில் அணுகவேண்டும் என்ற சிந்தனையை எங்கள் நெஞ்சங்களில் ஏற்றி வைத்துள்ளது. இவ்வகையில் நீங்கள் உங்கள் கடமையினைச் சரிவரச் செய்துள்ளீர்கள்" என்றார்.

உதவி மேயர் தமது உரையினை அடுத்து தமிழின அழிப்பில் உயிரிழந்த அனைவருக்காகவும் மௌனஅஞ்சலி செலுத்தினார். அதனை அடுத்து கறுப்பு பட்டிகளை 15வது ஆண்டு நினைவைக் குறிக்கும்படியாக அணிவதற்கு கொடுத்தார். இதனை அடுத்து கனடிய தேசக்கொடியை அரைக்கம்பத்திற்குத் தாழ்த்தி உயிரிழந்த தமிழ் மக்களுக்கு தேச அஞ்சலி செய்தார். இதன் மூலம் வரலாற்றில் தமிழீழ மக்களுக்காக தனது தேசக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விட்டு அஞ்சலித்த முதலாவது நாடாக கனடா வரலாற்றுப் பெருமை பெற்றுள்ளது.

அன்று மாலை கனடிய புலம்பெயர் தமிழீழ மக்கள் பல்லாயிரக்கணக்காக கலந்து கொண்ட பேரணி ஒன்றையும் நினைவுக் கூட்டத்தையும் நடாத்தினர்.

1983 இனஅழிப்பு தமிழர்களை சிறிலங்கா தனது குடிகளாக கருதவில்லை என்பதையும் அவர்களது அரசியல் பணிவை ஆயுத முனையில் பெறுவதையே தனது அரசியலாகக் கொண்டுள்ளது என்பதையும் உலகுக்குத் தெளிவாக்கியது. அத்துடன் தமிழீழத்திற்கு வெளியே வாழ்ந்த தமிழர்களை அவர்களது தாயகமான வடக்கு கிழக்கு நோக்கி விரட்டியடித்ததின் மூலம் தாமாகவே தமிழர்களின் வரலாற்றுத் தாயகம் இலங்கைத் தீவில் தொடர்ந்து வந்தமையையும் உலகுக்கு வெளிப்படுத்தினர். சிங்கள அரசாங்கங்கள் தமக்கு காலனித்துவம் வழங்கிய பெரும்பான்மை அந்தஸ்தையும் இலங்கைத்தீவுக்கான சட்டபூர்வ அரசாங்கம் என்ற நிலையையும் பயன்படுத்தி சட்டவாக்கங்கள் மூலம் தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவ விகிதாசாரத்தை பலவீனப்படுத்தி நவகாலனித்துவ ஆட்சி ஒன்றை அவர்கள் மேல் ஏற்படுத்தி தமிழர்கள் ஜனநாயக ஆட்சியில் சிங்களவர்களுடன் இணைந்து வாழ்வதற்கான எல்லா அரசியலமைப்பு நிபந்தனைகளையும் மீறினர். இதனால் நாடற்ற தேச இனமாக்கப்பட்ட தமிழீழ மக்கள் தமது வரலாற்றுத் தாயகத்தை மீள நிறுவும் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை விடுத்து அதற்கான வழிகளில் உழைக்கத் தொடங்கியதும் நிராயுதபாணிகளான தமிழீழ மக்களை ஆயுத அடக்குமுறைகள் மூலம் இனஅழிப்பு செய்யும் செயற்பாட்டினை சிங்கள அரசு தனது அரசியற் செயற்திட்டமாக மாற்றிக் கொண்டது.

அதன் தொடர்ச்சியாக இன்று வரை தனது படைகள் மூலம் தமிழர்களை அழித்தொழித்து வருகிறது. சிறிலங்கா ஆயுதப்படைகள் தமிழர் தாயகத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்டாலே சிறிலங்கா 83 ல் ஆரம்பித்த தமிழர்களை இனஅழிப்பு செய்தல் என்ற அரசியல் செயற்திட்டத்தை செயலிழக்கச் செய்யலாம். இதற்கான வலிமையை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதற்கான செயற் திட்டங்களில் ஊக்கத்துடன் பங்கெடுப்பதன் மூலமே புலம்பெயர் தமிழர்கள் 83 ஆடி இன அழிப்பில் உயிரிழந்த தம் உடன் பிறப்புக்களுக்கு சிறந்த அஞ்சலி செலுத்த முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசின் உள்நாட்டு அராஜகத்தினால் தோல்விகண்ட வெளியுறவுக் கொள்கை

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் சோவியத் யூனியனின் சிதைவுடன் உலகில் வல்லரசுக்களுக்கிடையிலான கெடுபிடிப்போர் முடிவிற்கு வந்தது என்ற நிலையில், உலகிற்கு தனது தலைமையில் புதிய அரசியல் ஒழுங்கொன்றை அமெரிக்கா உருவாக்க முயன்றது. ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்பனவற்றின் அடிப்படையில் உலகிற்குத் தலைமைதாங்கி வழிநடத்திச் செல்லப் போவதாக காட்ட விளைந்தது.



அதாவது கெடுபிடி போர்க்காலத்தில் கம்யூனிஸ்ட்டுகளின் அச்சுறுத்தலுக்கு எதிரான செயற்பாடு என்ற ரீதியில் உலகில் ஒரு தொகுதி நாடுகளுக்கு தலைமை தாங்கிய அமெரிக்கா, கம்யூனிசியத்தின் வீழ்ச்சியின் பின் உலகத் தலைமையை ஒட்டுமொத்தமாக வைத்துக் கொள்ளவும் முரண்பாடான போக்கு கொண்டவர்களுக்கு எதிரான நடவடிக்கைக்கென ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாதம் என்பனவற்றை ஆயுதமாகவும் தயார் படுத்திக் கொண்டது.

இவ்வாறானதொரு தோற்றப்பாட்டை சர்வதேச ரீதியில் அமெரிக்கா உருவாக்க முயன்று கொண்டிருக்கையில் சிறிலங்காவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றுகொண்டிருந்த சந்திரிகா குமாரதுங்க தலைமையில் பொது சனஜக்கிய முன்னணியும் ஜனநாயக மீட்பு மற்றும் மனிதஉரிமை மீறல்கள் என்ற ரீதியில் பெரும் பிரச்சார நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது.

பொ.ஜ.முன்னணியின் இந்நிலைப்பாடு ஏதோ அமெரிக்கா வகுக்க முயன்ற உலக அரசியல் ஒழுங்கை நிலைநிறுத்தும் சிந்தனையின் பாற் பட்டது என்பதல்ல. அன்று சிறிலங்காவில் இருந்த அரசியல் சூழ்நிலையில் இதுவே எடுபடக்கூடிய பிரச்சார அம்சமாக இருந்தது. ஆகையினால் இதனைச் சந்தர்ப்பவசத்தால் அமைந்த போக்கு என்றே கூறலாம்.

இதேசமயம், சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கியமுன்னணி இனப் பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தது. இது கூட அன்றைய உலகின் போக்கை அனுசரித்ததொன்றாகவே இருந்தது. ஆனால் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்பு ஏற்று சிறிது காலத்துக்குள்ளேயே இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியிலான அரசியல் தீர்வு என்ற நிலைப்பாட்டில் இருந்து தன்னை போருக்கு தயாராக்கிக்கொண்ட சந்திரிகா அரசாங்கம் அதனைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான நடவடிக்கை என்பதற்கு மாறாக பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனப் பிரச்சாரப்படுத்தவும் தொடங்கியது.

இது மேற்குலகத்திற்குத் தலைமை தாங்குவதோடு உலகிற்கு தலைமை தாங்க முயன்று கொண்டிருந்த அமெரிக்காவின் அறிவிப்புடன் ஒத்துப் போகும் தன்மையை கொண்டதாக இருந்தது. ஆனால் இது சந்தர்ப்பவசமான அரசியல் சூழ்நிலை ஆயினும் அமெரிக்காவின் பிரகடனங்களுக்கு ஏற்ப சிறிலங்காவின் அறிவுப்புகளும் இருந்தமை மேற்குலகத்தை நோக்கிய நகர்விற்கு இது பெரிதும் உதவியாக இருந்தது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பம் முதலே சந்திரிகா அரசாங்கம் மேற்குலகத்தின்பால் தீவிர அக்கறை காட்டியது. சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு முடுக்கிவிடப்பட்டு பெரியளவில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்கள் மேற்குலகில் மேற்கொள்ளப்பட்டன.




இதன் ஓர் அங்கமாக வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு பல தடவைகள் விஜயங்களை மேற்கொண்டார். இதன்மூலம் இந்த அரசாங்கங்களின் நிலைப்பாட்டை சிறிலங்கா அரசிற்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டமைக்கு இரு காரணங்கள் முக்கியமானவையாக இருந்தன. ஒன்று புதிய உலக அரசியல் போக்கை தீர்மானிக்கும் சக்தியாக அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் இருந்தன. ஆகையினால் அவைகளைத் திருப்திப்படுத்துதல் – அதாவது தமது போர் நடவடிக்கையை நியாயப்படுத்தல் சிறிலங்காவிற்கு அவசியமானதாக இருந்தது. ஏனெனில் அவர்கள் உலக அரசில் வகிக்கும் செல்வாக்கும் சிறிலங்காவின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக இருந்தமையும் காரணமாகும்.

இரண்டாவதாக, மேற்குலகில் குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடாவில் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் அளித்து வந்துள்ள ஆதரவாகும். இவ் ஆதரவானது மேற்குலகில் புலிகளுக்கு ஆதரவானதொரு அரசியல் சூழ்நிலையை உருவாக்குவதற்கும் – புலிகளுக்கு பெருந்தொகை நிதி கிடைப்பதற்கும் உதவும் எனச் சிறிலங்கா அரசாங்கம் கருதியது.

இந்த நிலையில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான பெரும் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு தமது நிலைப்பாட்டிற்கு அங்கீகாரம் பெறும் பொருட்டு, அதிகாரப்பரவலாக்கல் என்ற ரீதியில் இனப்பிரச்சினைக்கு இரட்டைவழி அணுகுமுறையைக் கைக்கொள்ளப் போவதாகவும் அரசாங்கம் அறிவித்தது. அதற்கென ஒரு அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தையும் முன் வைத்தது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இம் முயற்சியானது மேற்குலகில் அரச மட்டத்தில் கணிசமான வரவேற்பையும் திருப்தியையும் ஏற்படுத்தியிருந்தன. இதனை அந்த நாடுகள் சந்திரிகா அரசுக்கு அளித்து வந்த தொடர்ச்சியான நிதி உதவிகளில் இருந்து புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

இச் சூழ்நிலையை மேலும் பயன்படுத்திக் கொள்ள சந்திரிகா அரசாங்கம் முனைந்தது. இதன் பிரகாரம் மேற்குலக அரசுகள் விடுதலைப் புலிகள் மீது சில அழுத்தங்களைப் போடும் வகையில் தனது முயற்சிகளை மேற்கொண்டது. இம் முயற்சியானது மூன்றாம் கட்டப் போர் தொடங்கிய காலத்திலிருந்தே முனைப்புப்படுத்தப்பட்டது. ஆனால் மூன்றாண்டு முயற்சிகளின் பின்னரும் ஐரோப்பிய நாடுகளில் சிறிலங்கா அரசினால் எதிர்பார்த்த அனுகூலத்தை பெற முடியவில்லை. அமெரிக்கா மட்டும் கடந்த ஆண்டின் இறுதியில் உலகில் பயங்கரவாத அமைப்புக்கள் என பட்டியலில் இட்ட முப்பது அமைப்புக்களில் விடுதலைப் புலிகள் அமைப்பையும் இணைத்துக் கொண்டது. ஆனால் அமெரிக்காவின் இந்த நடவடிக்கையானது அமெரிக்கத் தரப்பிலோ அன்றிச் சிறிலங்காத் தரப்பிலோ கூறிக் கொள்வது போன்று பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்பதல்ல. இது அரசியல் சார்ந்த நோக்கம் கொண்டது என்பதை தென் ஆசியாவின் அரசியல் சூழ்நிலை தெளிவுபடுத்தக் கூடியதாகும். அதாவது தென் ஆசியா அரசியலில் தனது காலை வலுவாக ஊண்டிக் கொள்ள அமெரிக்காவுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு சிறிலங்கா தயாராக இருந்ததே காரணமாகும்.

இவ்விடயத்தினை சிறிலங்கா அரசு அமெரிக்காவுக்கு முன்னதாகவே பல தடவை வருந்திக் கேட்டுக் கொண்டபோதும் பிரிட்டன் தடை விதிக்க முன்வராததில் இருந்தே புரிந்து கொள்ள முடியும். பிரிட்டனில் உள்நாட்டுச் சட்டங்கள் இத்தடைக்கு அனுகூலமாக இல்லை என்பதே காரணமாக இருப்பினும்கூட தென்னாசிய அரசியலில் குறித்த அவர்களின் நிலைப்பாடும் உள்நாட்டு அரசியலில் விளையக் கூடிய பாதிப்புக்களையும் பொறுத்தே பிரிட்டன் இவ்வாறு நடந்து கொண்டது.



ஒருபுறம் சந்திரிகா அரசாங்கம் புலிகளுக்கு எதிரான இவ்வகையிலான பிரச்சாரத்திலும் இராஜீக முயற்சிலும் ஈடுபட்டு வந்தபோதிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருபெரும் அம்சங்கள் சிறிலங்கா அரசுக்கு சாதகமான சூழ்நிலையை தோற்றுவிப்பதில் முட்டுக்கட்டையான விடயங்களாக இருந்தன.

இதில் ஒன்று சர்வதேச ரீதியிலான மனித உரிமை அமைப்புக்களின் அறிவிப்புக்களும் அரச சார்பற்ற நிவாரண அமைப்புக்களின் அறிக்கைகளும் ஆகும். இவ்விரண்டு அமைப்புக்களும் சிறிலங்கா அரசாங்கம் எவ்வளவுதான் மூடிமறைக்க முற்பட்டாலும் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளும் ஒடுக்குமுறைகளையும் மனித உரிமை மீறல்களையும் வெளிக்கொண்டு வந்தவண்ணமே இருந்தன. இந்த நிலையில் சந்திரிகா அரசாங்கம் என்னதான் முயற்சிகளை மேற் கொண்டாலும் பக்கச் சார்பற்ற

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "தலைவரின் முன்கூட்டிய திட்டமிடல், தந்திரோபாயங்களின்படி நாம் செயற்பட்டதால் ஜெயசிக்குறுவால் இலக்கை அடையமுடியவில்லை"

**மூத்த தளபதி கருணா அம்மான்**

**நேர்காணல் – சத்தியன், சாத்தன்**

சந்திரிகா தலைமையிலான பொ. ஐ. முன்னணி அரசின் தலைவிதியையே நிர்ணயிக்கப்போவது எனப்படும் "ஒப்பரேசன் ஜெயசிக்குறு" – வெற்றி நிச்சயம் இராணுவ நடவடிக்கையை ஒரு வருடமாகத் தடுத்து நிறுத்தி, புலிகள் ஒரு இராணுவ அற்புதத்தைப் படைத்து வருகிறார்கள். இந்த அற்புதத்தைப் புரியும் புலி வீரர்களைக் களத்தில் வழிநடத்தும் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கருணா அம்மான் அவர்களை களத்தில் சந்தித்து ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை பற்றிக் கேட்டோம்.

மனித நடமாடமற்றுப் போனாலும் போராளிகளே உயிர்ப்பைத் தந்து கொண்டிருந்த சூழல், ஆதிக்கத்தின்



கோரமுகம் தெரிந்த அழிவின் சுவடுகள் நடுவே, எமது கேள்விகளிற்கு வெகு இயல்பாகப் பதிலளித்தார் அவர்.

**கேள்வி:** 1997ஆம் ஆண்டு வெசாக் (25-05-1997) தினத்துக்குள் மாங்குளத்தில் கொடியேற்றவெனத் தொடங்கிய ஜெயசிக்குறு அடுத்த வெசாக் (11-05-1998) கடந்துபோன பின்பும் அந்த இலக்கை எட்டவில்லையே, ஏன்?

உண்மையில் இந்த நடவடிக்கை மூன்று கட்டங்களைக் கொண்டது. ஓமந்தை வழியாகவும் நெடுங்கேணி வழியாகவும் நகர்ந்து புளியங்குளத்தைக் கைப்பற்றுவது முதலாவது கட்டம். மாங்குளத்தைப் பிடிப்பது இரண்டாவது கட்டமாகவும் கிளிநொச்சியை அடைவது மூன்றாவது கட்டமாகவும் அமையும். இந்த ஒவ்வொரு கட்டங்களிற்கும் ஒவ்வொரு மாதமே ஒதுக்கப்பட்டபோதும், அதைவிட விரைவாகவே முடிக்கப்படும் என்றும் படைத் தலைமையால் நம்பப்பட்டது.

இந்த நடவடிக்கையின் உள் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் தலைவர் தெளிவாகவே உணர்ந்திருந்தார் – அனுமதிப்பதில்லை என முடிவெடுத்தார்.

எதிரியின் முன்னைய நடவடிக்கைகளை (ரிவிரெச, சத்ஜெய, எடிபல) அவதானித்து வைத்திருந்த தலைவர் – அவற்றிலிருந்து, அவனது நகர்வு எப்படியிருக்கும் என்பதைக் கணித்து, அதற்கேற்ப திட்டங்களை வகுத்து, தளபதிகள், போராளிகளை நன்கு தயார்ப்படுத்தி இருந்தார். 'எடிபல' நடவடிக்கையின் தந்திரோபாயத்தைப் போலவே, இந்த நகர்வும் எதிரியால் நடத்தப்பட்டது.

மரபுமுறையில் கவசப்படை துணையுடன் நகர்வை மேற்கொள்ளக் கூடிய 55வது டிவிசனையும் இதற்காக அரசு ஈடுபடுத்தியது. இவர்களை எதிர்கொள்வதற்கான திட்டங்கள், தந்திரங்கள் உடனுக்குடன் தலைவரால் வகுக்கப்பட்டு வழிநடத்தப்பட்டது.

அத்துடன், புதிதாக சிறப்புப் படையணிகளும் உருவாக்கப்பட்டன. இராணுவத்தின் பிரதான நகர்வு ஆயுதமாகிய டாங்கிகளை உடைக்கும் கவச எதிர்ப்புப் படையணி உருவாக்கப்பட்டது.

இவற்றுடன் பீரங்கிப் படையணி, மரபுப் படையணியுடன் சண்டையிட பெரிதும் உதவியாக இருந்தது. தளபதி பானு அவர்கள் தலைமையிலான எமது பீரங்கிப் படையணியின் குறி தவறாத– திறமையான – தாக்குதல்கள் எதிரிக்கு பேரிழப்பைக் கொடுத்தன.

இவ்வாறான அனைத்துக் காரணிகளும் ஒன்று சேர்ந்து எதிரியை அவனது இலக்கை அடைய விடாமற் செய்துள்ளன.

**கேள்வி:** கட்டளைத் தளபதிகளை மாற்றி, உலக நாடுகளின் பயிற்சி, ஆயுத உதவிகளை பெற்று, தந்திரோபாயங்களை மாற்றி— என்று படையினரின் பகீரத முயற்சி பயனளிக்கவில்லையே! அது ஏன்?

அதற்கு தலைவரின் தந்திரோபாயத் திட்டமே காரணம். என்ன தான் படைத் தளபதிகளை மாற்றினாலும், இராணுவத்தின் – வழிநடத்தும் ஜெனரல்கள் தாம் கற்ற கோட்பாடுகளை பிரயோகிக்கும்போது, அது யதார்த்தத்துக்கு ஒத்துவருவதில்லை, அத்துடன் புதிய புதிய அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கி, நடவடிக்கையில் ஈடுபடுத்தும்போது அனுபவமற்ற அவர்களால் எதையும் சாதிக்க முடிவதில்லை.

கரப்புக்குத்தி – விஞ்ஞான குளம் தாக்குதலின் பின் அதனை ஒரு சகிக்க முடியாத தோல்வியாக சிங்களம் கருதியதால், கட்டளைத் தளபதியான அசோக ஜெயவர்த்தனா மாற்றப்பட்டார். மன்னகுளம் தாக்குதலின் பின், பிரிகேடியர் வசந்த பெரேரா மாற்றப்பட்டார்.

மன்னகுளம் தாக்குதல் சிறிலால் வீரசூரியா பொறுப்பேற்ற பின், முதலில் நடத்திய நகர்வின் மீது நடத்தப்பட்டது. கனகராயன் குளத்தை பக்கவாட்டாக சுற்றிவளைக்கும் நோக்கிலான அது ஒரு நல்ல திட்டமே. ஆனால், விழுந்த பாரிய அடி, வீரசூரியாவுக்கு ஒரு பாதகமான தொடக்கமாக அமைந்துவிட்டது.

**கேள்வி:** இந்த நீளச் சமர் அரசுக்கு ஏற்படுத்திய தாக்கங்கள் – இழப்புகள் பற்றிச் சொல்லுங்கள்?

இந்த நடவடிக்கையின் நோக்கங்கள் இரண்டு. ஒன்று இராணுவ ரீதியானது. யாழ்ப்பாணத்துக்கான தரைவழி விநியோகப் பாதையைத் திறத்தல். ஏனெனில், யாழ்ப்பாணத்திலுள்ள 40,000 படையினருக்கான வழங்கலை கடல் மூலம் வழங்குவதோ ஆகாய மார்க்கமாக வழங்குவதோ சாத்திய மில்லாததால். இரண்டாவது – அரசியல் ரீதியானது. பாதை திறக்கப்பட்டால் அதைப் பெரிய சாதனையாகக் காட்டிப் பதவியைப் பிடிக்கலாம். ஆனால், இந்த இரண்டுமே இன்று ஆட்டங் கண்டிருக்கிறது.

ஜெயசிக்குறுவில் கொல்லப்படும் படைகள் அனைத்துமே நன்கு பயிற்சியும் அனுபவமும் பெற்ற சிங்களத்தின் முன்னணிப்படைகளே. இது ஒரு நீண்ட காலப் பின்னடைவை ஏற்படுத்தும். இந்த இழப்பை ஈடுசெய்வது சிரமமானது.

அடுத்தது – கவசப்படை அழிக்கப்படுவது. இது இராணுவத்தின் உள – உரத்தை உடைத்துவிடுகிறது. அத்துடன் கவச ஓட்டுனர்கள், கொமாண்டர்கள் கொல்லப்படுவதும் இலகுவில் ஈடுசெய்யப்பட முடியாதது. மேலும், இதில் ஏராளமான இளநிலை அதிகாரிகள் கொல்லப்படுகிறார்கள். களத்தை விட்டு அப்புறப் படுத்தப்படுகிறார்கள். இதுவும் ஒரு நீண்ட காலப் பின்னடைவை தரக்கூடிய விடயமே.

கடும் யுத்தத்தின் விளைவால் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடும் வீதம் அதிகரிக்கிறது. ஏராளம் பேர் நோய்வாய்ப்படுகிறார்கள். (வைரஸ்காய்ச்சல், மஞ்சட்காமாலை) விடுப்பு வழங்கப்படுவது போன்ற விடயங்களில் கடும் இறுக்கம் கடைப்பிடிக்கப்படுவதால் தற்கொலை செய்யும் போக்கும் பரவுகிறது.

சிங்கள மக்கள் மத்தியில் – யுத்தத்தின் இழப்புகளைத் தாங்க முடியாமல் – அரசின் மீது கடும் சீற்றம் ஏற்படுகிறது. முன்பு மறைக்கப்பட்ட இழப்புக்கள் கூட புதிய ஆட்சேர்ப்பு முயற்சிகளால் வெளிச்சத்துக்கு வருவதாலும் இது ஏற்பட்டுவருகிறது.

வடகொரியா மீது படையெடுத்த அமெரிக்கப் படைகளிற்கு ஏற்பட்ட இழப்புகளால் தளபதி மைக் ஆதர் பதவி விலக வேண்டி ஏற்பட்டதும், ஜனாதிபதி ட்ரிமன் அடுத்த தேர்தலில் தூக்கி எறியப்பட்டது. சிறிலங்கா அரசுக்கும் இக்கெதி ஏற்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

**கேள்வி:** உலக வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்கதொரு பெருஞ்சமரான ஜெயசிக்குறு எமது விடுதலைப் போராட்டத்தை முன் நகர்த்துவதில் எத்தகைய பங்கை வகிக்கிறது?

பதில்: 2ஆம் உலகப் போரில் ரஷ்யாவின் மீது கிட்லர் நடத்திய பார்பரோசா நடவடிக்கையால் அவனது சகல திட்டங்களுமே தோல்வியடைந்தன. ஏனெனில், நீண்டு செல்லும் எந்த நடவடிக்கைகளுமே வெற்றியளிப்பதில்லை. நீண்ட நடவடிக்கையில் அதிகளவு சனங்கள் அழிந்துவிடுவதால் வெற்றி கிட்டுவதில்லை.

சன்சூவின் தத்துவமும் இதுவே. "இராணுவ நடவடிக்கையின் இலக்கு, வெற்றி. அது வேகமாகக் கிடைக்க வேண்டும்.

அப்படிக் கிடைக்காவிட்டால், இலக்கு அடையப்பட்டால் கூட தோல்வியே ஏற்படும் என்பதாகும்." எனவே, சிங்கள அரசு தோற்கப்போவது இங்கு உறுதியாகிறது.

இந்த நடவடிக்கைக்காக தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து இங்கு படைகள் கொண்டு வந்து குவிக்கப்படுவதால் அந்தப் பகுதிகள் விடுவிக்கப்படுகின்றன. அவற்றை விடுவிக்க வேண்டிய தேவை இல்லாமற் போகிறது.

அத்துடன் எமது தளபதிகள் போராளிகளிற்கு ஏராளமான புதிய தந்திரோபாயங்கள், உத்திகளை கற்றுணரவும் – கற்றதை பிரயோகிக்கவும், நல்லதொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது எமது படையணிகளின் தரத்தை உயர்த்து கிறது.

இவ்வாறு பல அம்சங்களிலும் ஜெயசிக்குறு நடவடிக்கை எம்மை வளர்த்து எமது விடுதலைக்கான ஒரு சாதகமான திருப்பு முனையாக அமைகிறது என்று கூறலாம்.

**கேள்வி:** பொதுமக்களின் பங்களிப்பு இச்சமரிற்கு எப்படியிருந்தது?

மக்கள் தமது இயலுமைக்கு ஏற்ப நிறையவே செய்கிறார்கள். பசித் தேவையைப் பூர்த்திசெய்ய உலர் உணவுகள் தந்தும், பாதுகாப்புத் தேவைக்கு பதுங்கு குழிகள் அமைத்தும் அதற்கான கட்டைகள் தறித்துத் தந்தும் உதவுகிறார்கள்.

அத்துடன் காயமடையும் போராளிகளின் உயிர்காக்க இரத்ததானம் வழங்கியும் பராமரித்தும் உதவுகிறார்கள்.

அதேவேளை, களத்தில் நிற்கும் போராளிகளை உணர்வு பூர்வமாக வாழ்த்தி தமது ஆன்மார்த்தமான ஈடுபாட்டை வெளிப்படுத்துவது மிக முக்கிய விடயமாகும். இந்தச் செயற்பாடு எமது போராளிகளை எழுச்சியுறச் செய்து, மேலும் மேலும் அர்ப்பணிப்புடன் சமரில் ஈடுபட்டு, எமது மண்ணில் கால் பதிக்க முயலும் எதிரியைத் தடுத்து நிறுத்தி அவனை அழித்து வெற்றி பெறத்தூண்டுகிறது.

**கேள்வி:** இந்த மிகப்பெருஞ் சமரில் எமது போராளிகள் காட்டிய தீரமும் மனவுறுதியும் பாரியதாகும். அவ்வாறான தீரமிக்க சில சண்டைகள் பற்றிக் கூறுங்கள்?

இந்தச் சமரில் அவ்வப்போது நடந்த

7ம் பக்கம் பார்க்க.....

# "பல சிங்கள உயர் இராணுவ அதிகாரிகள் தூக்கி எறியப்படுவதற்கு எமது தாக்குதல்தான் காரணம்"

– முத்த தளபதி கருணா அம்மான் அவர்கள்

## தலைவரின் முன்கூட்டிய திட்டமிடல் ...

பலப்பல சண்டைகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை–சொல்ல வேண்டியவை. தேவை கருதிச் செய்யப் பட்டவையும், பாதுகாப்புக் கருதிய தாக்குதல்களும் இந்த வகைக்குள் அடங்குகின்றன.

01 புளியங்குளத்தை நோக்கி சிறிலங்கா இராணுவத்தின் 55வது படையணி, கவசப்படையணியின் துணையுடன் முன்னேறியபோது, கவசப்படையை எமது அரனுக்குள்விட்டு, மடக்கித் தாக்குவதற்கு முன். கூட்டியே திட்டமிட்டிருந்தோம். ஏனெனில், கவசப் படையின் வேகத்துக்கு படைகளால் நகரமுடியாது. அதனால், படைகளை உள்ளே விடாமல் ராங்கிகளை மட்டும் அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி ராங்கிகள் உள்ளே வந்தன. மடக்கி அவற்றைத் தாக்கியதில் இரண்டு ராங்கிகள் அழிக்கப்பட்டன. ஒரு இலகு ராங்கி–APC கைப் பற்றப்பட்டது. தளபதி தீபன் தலைமையிலான திறமையான தாக்குதலான அது வெற்றிகரமாக அமைந்தது.

02 அடுத்த ஒரு குறிப்பிடக்கூடிய தாக்குதல் புதூர்ச் சந்தியில் நடந்தது. எவ்வளவோ முயன்றும் புளியங் குளத்தைப் பிடிக்க முடியாமல் இருந்தபோது பின்புறமாக புளியங் குளத்தை வளைத்துப் பிடிப்பதற்காக சின்ன அடம்பன் பகுதியிலிருந்து புதூர்ச் சந்தியை நோக்கி 53வது படையணியின் AMB படைப்பிரிவு முன்னேறியது. இவ்வாறு புதூர்ச் சந்தியைப் பிடித்தால், புளியங்குளத்தில் நிலைகொண்டிருந்த எமது படையணிகள் தானாக ஒதுங்க வேண்டும் என்று இராணுவத் தலைமை எதிர் பார்த்தது. உண்மையில் பெருமழை பெய்துகொண்டு இருந்ததால், எமக்கும் விநியோகப் பிரச்சனை எழுந்தது. இதனால் அந்த வீதியை "அடித்துப் பிடிக்கத்" தீர்மானித்தோம். அது "பைற்றர் கிறவுண்ட்" ஆக மாறியது. இந்தத் தேவையை உணர்ந்து கொண்டு 'இறங்கிய' போராளிகள் திறமையாகச் செயற் பட்டதால், அவனுக்கு நிறைய இழப்பைக் கொடுக்க முடிந்தது. ஒரு சிறு அணியை அனுப்பியே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இடமும் கைப்பற்றப்பட்டது. மாலை நேரத்தில் அவன், அந்த இடத்துக்கு வந்தான். ஒரு இரவு மட்டும் புளியங்குளத்தில் நிலைகொண்டிருந்த போராளிகளுக்கு உணவு அனுப்பப்படவில்லை. மறுநாள் அதிகாலை 5 மணிக்கு உணவு அனுப்பப்பட்டுவிட்டது.

இந்தக் கடுந்தாக்குலில் AMBக்கு ஏற்பட்ட பாரிய இழப்பால் அதன் தளபதி பிரிகேடியர் சீவலி வன்னியசேகர தூக்கியெறியப்பட்டார். புதூர்த் தாக்குதலால் புளியங்குளத்தில் நின்ற எமது படையணிகளிற்கு உணவு போனது மட்டுமல்ல, சீவலி வன்னியசேகரவின் பதவியும் போனது!

03 இன்னுமொரு முக்கியமான சண்டை கற்கிடங்கில் நடந்தது. 10ஆம் மாதம் 5ஆம் திகதி இரவு கரப்புக்குத்தி விஞ்ஞானக் குளத்தில் இருந்த முகாம்கள், களஞ்சியங்களைத் தாக்கி கைப்பற்ற எல்லா ஏற்பாடும் முடிந்துவிட்ட நிலையில் 5ஆம் திகதி காடுகளினூடாக வந்த 53ஆவது படையணியின் கொமாண்டோக்கள் கரிப்பட்ட முறிப்புச் சந்தியினூடாக கற்கிடங்கு நோக்கி முன்னேற முயன்றனர். கற்கிடங்கைப் பிடித்து, கனகராயன்குளத்தை பின்பக்கமாக வளைக்கத்திட்டம். அப்படி அந்தக் கொமாண்டோப் படையணி முன்னேறி கற்கிடங்குச் சந்திக்கு வந்தால் அன்றிரவு திட்டமிடப்பட்டிருந்த தாக்குதலை நிறைவேற்றுவது இயலாமல் போயிருக்கும்.

லெப். கேணல் சந்திரகாந்தன் தலைமையிலான அணி வெகு தீவிரமாச் சண்டையிட்டு கற்கிடங்குச் சந்திக்கு அவனுக்கு வழிவிடாமல் தடுத்ததின் மூலம் அன்றைய இரவுத் தாக்குதலுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது. முன்னேற முயன்ற 25 இராணுவத்தினரின் உடல்களையும் கைப்பற்றிய, மிகத் தேவையான நேரத்தில் நடந்த, மிகச் சிறந்த மிகக் கடுமையான தாக்குதல் அது. அதனால்தான் கரப்புக்குத்தி – விஞ்ஞான குளம் தாக்குதல் இலகுவாக நடத்தப்பட முடிந்தது. இந்தப் பெருந் தாக்குதலின் பின்பே ஜெயசிக்குறு கட்டளைத் தளபதி அசோகா ஜெயவர்த்தனா பதவி யிறக்கப்பட்டு முக்கியத்துவமற்ற இராணுவத் தொண்டர் படைக்கான தளபதியாக நியமிக்கப்பட்டார்.

04 அடுத்தது, மன்னகுளத்தில் கொமாண்டோப் படை அழிக்கப்பட்ட தாக்குதல். அன்றும் மூன்று முனை முன்னேற்றம் நடந்தது. கனகராயன் குளத்துக்கு பக்கவாட்டாக Sfcம், மெயின் றோட்டால் ஆமியும் மன்னகுளம் நோக்கி கொமாண்டோ படைப் பிரிவின் 1ஆம் 2ஆம் றெஜிமென்றுகளும் முன்னேறின.

சிங்களப்படைக்கு மிகக் கடுமையான இழப்புக்களை ஏற்படுத்திய சண்டை இது. ஒரு கொமாண்டோ றெஜி மென்றுக்கு தலைமையேற்று வந்த லெப்ரினன் கேணலும் கொல்லப்பட்டார். அது மட்டுமல்லாமல் இது இராணு வத்தின் மனவுறுதியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

எந்த இராணுவத்துக்கும் தங்கள் முன்னணிப் படை அடிவாங்கும்போது தானாகவே மன உறுதி உடையும். இது சிறிலால் வீரசூரியாவின் முதலாவது தாக்குதல் என்பதால் அவரது தொடங்குநிலை தோல்வி அடைந்தது. அவர் தொடக்கத்தையே இழந்தார். இத்தோல்விக்குப் பின் பிரிகேடியர் வசந்த பெரேரே மாற்றப்பட்டார்.



05. மாங்குளத்தைக் கைப்பற்ற கடந்த 2–4–98இல் நடந்த சண்டையும் குறிப்பிடத்தக்கது. இது முற்றிலும் வேறுபட்ட சண்டை இதில் ராங்கிப் படையே நகர்வுப் படையாக எதிரி பயன்படுத்தினான். இதற்கு முன் ராங்கிகளை துருப்புகளுக்காக உதவிப்படையாக ஒடுங்கிய பகுதிகளுக்கூடாக நகர்தியவன், இந்த முறை துருப்புகளைத் தவிர்த்து ராங்கிகளை மட்டுமே வைத்து வேகமாக நகர்வை மேற்கொண்டான். ஜயசிக்குறுவில் இப்படி நடந்த முதல் நகர்வு இதுதான். ஓலுமடு இதற்கு வசதியான பிரதேசம். வெளியூடாக ராங்கிகள் விரைந்து வரலாம். நாங்களும் இதை எதிர்பார்த்து முன்கூட்டியே தயாராக இருந்ததால் – ஏனென்றால் வெளியாக இருப்பதால் அவன் ராங்கை வைத்து நகரலாம் என்று எதிர்பார்த்து– ராங்கை எப்படி முறியடிப்பது என்று தயார்படுத்தி இருந்ததால்– அவர்களது முயற்சி முற்று முழுதாக தோல்வியடைந்தது.

அன்று தகர்க்கப்பட்ட இரண்டு ராங்கிகள் எமது முன்னிலைகளுக்குள் கிடக்கின்றன. இவற்றைப் பார்க்கும் எமது போராளிகளிற்கு மனவுறுதி மேலும் அதிகரிக்கிறது.

கேள்வி: ஒரு வருடம் கடந்த பின்பும், இவ்வளவு இழப்புகள் தோல்விகளின் பின்னரும் இந்த ஜெயசிக்குறு நடவடிக்கையை சிறிலங்கா அரசு இன்னும் ஏன் தொடருகிறது?

சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை இது ஒரு கௌரவப் பிரச்சினை. அரசு என்ற ரீதியல் அந்த வரட்டுக் கௌரவம் காரணமாக இதைக் கைவிட முடியாதுள்ளது. கைவிட்டால; PA – பீப்பிள்ஸ் அலயன்சுக்கு அரசியல் எதிர்காலமே இல்லை என்பதால், இதை மேலும் தொடரவே திட்டமிடப்படுகிறது.

இராணுவக் கண்ணோட்டத்தில் பார்த்தால் இதை எப்போதோ நிறுத்தியிருக்க வேண்டும். நிறுத்தி வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்க வேண்டும். எந்தவொரு நாடும் – இராணுவமும் அதைத்தான் செய்யும். செய்திருக்கும்.

ஆனால், இவர்களைப் பொறுத்தவரையில் இது இயலாமல் இருக்கிறது. அரசியல் இலாபம் ஒன்றினை எதிர்பார்ப்பதால் இயலாமல் இருக்கிறது. அதாவது ஆற்றில் மிதந்த கரடியை மூட்டை என்று நினைத்துப் பிடித்த கதையாகிவிட்டது. அதனால், சந்திரிகாவும் ரத்வத்தையும் இந்த நடவடிக்கையை எப்படியாவது முடிக்கத்தான் பார்க்கிறார்கள். நடக்கப்போவது இன்னும் நிறைய அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் கொல்லப்படப்போவதுதான். அத்தோடு பொருளாதார அழிவும் யுத்தத்தை நடத்த வளம் மிக்க பூமி என்று கருதப்படும் இலங்கையின் வளங்கள் அந்நிய நாடுகளுக்கு விற்கப்படுகின்றன.

இப்படிப் பார்த்தால் ஒட்டுமொத்தத்தில் சந்திரிகா அரசு சிங்கள மக்களுக்கு துரோகத்தைத்தான் செய்கிறது. மேலும், யுத்தத்தை தொடர்ந்தால் சிறிலங்காவிற்கு பெரிய பாதிப்புகள் ஏற்படும்.

தொடரும் இந்த யுத்தத்தில் பொதுமக்களின் பங்கு மேலும் எப்படி அமைய வேண்டும் என எண்ணுகிறீர்கள்?

ஒரு சிலரோடு தலைவரால் தொடங்கப்பட்ட இயக்கம் இன்று பெரியதொரு தமிழீழ இராணுவமாக நின்று சண்டையிடுகின்றோம். இதற்குக் காரணம் படைபலம். படைபலம் இருப்பதாலே. வன்னிச் சமரில் இன்று இதைச் சாதிக்க முடிகிறது. இன்று இரண்டு நாட்டுப் படைகளுக்கும் யுத்தம் நடக்கிறது. தமிழீழ படைகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும்.

இதை – மேலும் வளர்ந்து– வெற்றியைப் பெறுவது –தமிழீழ மக்களின் கைகளில்தான் இருக்கிறது. தாய்மார் தங்கள் பிள்ளைகளை போராளிகளாக அனுப்பி வைப்பதும், இளைஞர்கள் நேரடியாக போராட்டத்தில் பங்கு பற்றுவதும் எமது பலத்தை அதிகரிக்கும். அதனால் வெற்றியைக் கெதியில் பெறலாம்.

ஏனென்றால் தலைவரிடம் தேவையான திட்டங்கள், தந்திரங்கள் எல்லாமே இருக்க, ஆயுத தளபாடங்களும் நிறையவே உள்ளன. தேவை – ஆட்பலம் மட்டுமே. அதைத் தருவது பொதுமக்களின் கைகளிலேயே உள்ளது. அதாவது வெற்றி அவர்களிடமே உள்ளது.

**கேள்வி:** எமது மக்களிற்கு தாங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இந்த நடவடிக்கையால் ஏராளம் பொதுமக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களது வளமான காணிகள், வீடுகள் சொத்துகள், கால் நடைகள், அழிக்கப்பட்டுள்ளன. அவர்களது சொத்துகள் சிங்களவர்களாலும், படைகளாலும் சூறையாடப்படுகின்றன.

வெளியேற்றப்பட்ட எமது மக்கள் எதுவித வசதிகளுமின்றி கொடிய காலநிலையின் கீழ் பெருந் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். இந்த எமது மக்கள் திரும்பவும் தங்கள் இடங்களில் வாழவேண்டுமென்ற உணர்வு டனேயே நாங்கள் தீவிரமாகச் சண்டையிடுகிறோம். எமது 1300 போராளிகள் இதற்காகவே தமது உயிரைத் தியாகம் செய்துள்ளார்கள். இந்த 1300 போராளிகளின் உயிர்தியாகத்தாலேதான் எதிரியின் திட்டங்கள், நகர்வுகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. விபரிக்க முடியாத மிக கஷ்டமான சூழலிலும் எமது பெண் போராளிகளும் இந்த நோக்கோடுதான் எதிரியை முன்னேற விடாமல், இலக்கை அடைய விடாமல் அவனைத் தொடர்ந்து தாக்கி வருகிறார்கள். ★

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எண்பத்து மூன்றில் ஏற்பட்ட தழும்புகளே....

தெள்ளுதமிழின்
திருவடிபணிந்து
தேசத்தலைவனின் தரிசனம்
நினைந்து
உள்ள யாவையும் உரிமை
பெற்றிட
ஈகம் செய்திடும் எம்புலி வீரரின்
நல்ல லட்சிய யாகம் உணர்ந்து
நாட்டின் விடுதலை போற்றி
யுங்கள்முன்
உள்ளத் தன்பினால் ஓரிரு
கவிவரி
சொல்லி யென்பணி செய்து
தொடருவேன்!

கல்லு முள்ளிலும்
காட்டாந் தரையிலும்
அல்லல் ஆயிரம்
ஆயிரமாய் பட்டுச்
சொல் லொணாத் துயர்
சூழத் தமதுமண்
எல்லை காத்திடும்
எந்தமிழ் மக்களின்
வல்லமை தனை
வணங்கி யிவர்துயர்
செல்லும் நாளுக்காய்ச்
சுதந்திர வாழ்வுக்காய்
வல்ல தெய்வத்தை
வேண்டிப் பரவுவேன்!

பசியிற் தாகத்திற்
பட்டினிக் கோலத்திற்
தசை நரம்புகள்
தொங்கிடும் தோற்றத்திற்
திசை வரம்புகள்
தெரியாத காட்டினில்
அசையும் எங்கள்
ஆருயிர் உறவுகள்
வசை கடந்த ஓர்
விடுதலை வாழ்வுக்காய்
விசையுடன் அங்கு
விரைவது காண்கிறேன்!

உரப்பை கொண்டு
உடல்தனை மறைத்து
இரைப்பை அரற்றவும்
இனிய குழந்தைகள்
சுரப்பிகள் போரிற்
சுருண்டு கதறவும்
மரத்தின் நிழலில்
மரணித் தெழுகின்ற

உரத்தைத் தங்கள்
உயிரிலே யேற்றிக்
கரத்தில் விடுதலை
விளக்கினை ஏந்தி
நடக்கும் இவர்களின்
நாவென ஒலிப்பேன்!

இனிய தமிழுக்காய்
ஈன்ற மண்ணுக்காய்
மனித நேயத்தின்
மானக் குரலுக்காய்ப்
புனித விடுதலைப்
பயண நிகழ்வுக்காய். . .

கனியாக் காய்களாய்க்



காய்க்காப் பூக்களாய்த்
துணிவின் உச்சியிற்
தொடர்ந்தும் போர்க்கள
அணியில் நிமிரும்
எங்கள் புலிகளின்
பணியில் நாமும்
தொடரப் பாடுவேன்!

எனக்காய் ஆயுதம்
ஏந்திய தம்பிகாள்!
எனக்காய்ப் பாய்ந்த
என்னிளந் தங்கைகாள்!
எனக்காய் மடிந்த
என்னரும் குழந்தைகாள்!
எனக்காய்ப் பிறந்த
என்னரும் வேங்கைகாள்!
பிணக் காடாகியும்
பெருமையைத் தாங்கும்
மணித் தாய்நாட்டின்
மாதவ மைந்தர்காள்!

உமக்காய் நாம்செய
ஒன்றுதான் உண்டு!
மனத்தால் பணத்தால்
உளத்தால் உறுதியாற்
சளைக்கா இனமாய்ச்
சங்கமித் தும்முடன்
உழைத்தல் ஒன்றே..
என்றிங்குரைப்பேன்!

உம்மை யழித்திட
உலகெலாம் அலையும்
அம்மையார் ஏவிய
அரக்கத் தமிழரின்
பொய்மை முகத்தைப்

பிய்த்திடும் அஞ்சா
உண்மை யுலகினைப்
படைத்திட எழுவோம்!

எண்பத்து மூன்றின்
ஆடியில் நிகழ்ந்த
துன்பத்தின் நிழலைத்
துறவாத விழியுடன்
இன்றைக்கும் வாழும்
இனிய தமிழரே!

எம்சொத்தை யிழந்தோம்!
உடமைகளை எரியவிட்டோம்!
தென்பட்ட திசையெல்லாம்
தெருவேறிப் புறப்பட்டோம்!
கலைத்தாய் கதறினாள்
கல்வித்தாய் குருடானாள்!
நிலத்தாய் எமைப்பார்த்து
நெஞ்சு வெடித்தழுதாள்!

எத்தனை அடிகள்!
எத்தனை மிதிகள்!
எத்தனை வெடிகள்!
எத்தனை குண்டுகள்!

எத்தனை இழிவுகள்!
எத்தனை பொழிவுகள்!
எத்தனை அழிவுகள்!
எத்தனை இழப்புகள்!

அன்புத்தாய் அழுதாள்
உன் தந்தை உயிர் துறந்தான்!
தன்பட்டு உடல்கருகி
நீறானாள் உன் தங்கை!
அம்பிட்டுச் சிறைபோனான்
அடங்காத உன்தம்பி!

தன்பொட்டையிழந்து
தாலியையும் பறிகொடுத்துக்
கும்பிட்டுக் கதறிக்
கொடியவர் முன்தான்வீழ்ந்து
தன்கற்பைக் காக்கச்
சவமானாள் உன்அக்கா!

எண்பத்து மூன்றில்
ஏற்பட்ட தழும்புகளே
எம்முட் பலரை
ஏற்றி யனுப்பின!
துன்பத்தின் சுமையுடன்
தூர தேசங்கள்
விண்தொட்டுப்
பறந்தோம்!
மண்விட்டுப் பிரிந்தோம்!

எண்பத்து மூன்றில்
எமது தமிழரின்
கண் சற்றுத்
திறந்தது!

சாதிப் பெருமையிற்
சல்லாபித் திருந்தவரும்
நீதி தேவனின்
நிழல்தேடி நடந்தார்கள்!
காதிற் பூவைத்துக்
கதவுக்குட் கிடந்தவரும்
நாதியிலை யென்று
நாட்டுக்குள் இணைந்தார்கள்!
வாதித்துப் பிழைத்தோரும்
வாய்விற்றுப் பிழைத்தோரும்
பேதித்து நின்றோரும்
பேரணியில் இணைந்தார்கள்!

எல்லாத் தமிழரும்
ஒன்றானார் சிங்களத்தின்

www.tamilarangam.net



பொல்லா அரசின்
பொறுப்பற்ற கொடுமையினால்
எல்லாத் தமிழரும்
ஓரினமாய் ஆனார்கள்!

எண்பத்து மூன்றில்
எரிந்தது எம்தேசம்!
நம்பற்றும் நம்முள்
நன்றாக எரிந்தது!

சிங்களப் பௌத்தம்
மூட்டிய செந்தீ
எங்களைப் புடமிட்டு
இனமானம் தந்தது!

பதினைந்து ஆண்டுகள்
பறந்தன இன்றுடன்
பாவியர் செய்த
படுகொலை அழிப்புகள்
இதுவரை ஓய்ந்ததா?
இல்லை– இல்லை!
முதுகெலும்புடைக்கும்
முயற்சிதான் தளர்ந்ததா?
சதியும் பொய்யும்
சற்றேனும் குறைந்ததா?
அதற்குப் பதிலாய். . .
ஆண்ட பரம்பரை
தனக்கு முப்படை
சமைப்பதில் முனைந்தது!

தரையிற் கடலிற்
தாக்குதல் முடித்து
இரையும் விமானப்
படையையும் தகர்த்தது!

தமிழன் படையுடன்
தரணியில் நிமிர்ந்தான்!
தலைவன் பார்வையின்
தீர்க்கத்தை யுணர்ந்தான்!

அடக்கியெமது மண்
ஆளலாம் என்றொரு
விடக் கனவுடன்
விடாப்பிடியாகத்தன்
படைக் கணங்களைப்
பயிற்சி செய்தும் பல
தடைக் கரங்களால்
தாக்கியும் இறுதியில்
முடக்குவாதத்தால்
முனகிடும் அரக்கியின்
குடைக்கு ஓரிரு
செய்திகள் சொல்லுவேன்!

புதுயுகம்
படைக்கும் புலிகளை
அவர் பெறும் வெற்றியை
உடைக்கும் நோக்குடன்
உலகெலாம் உதவிகள்
கிடைக்கும் என்று ஓர்
காற்தமிழ்க் காமரை

இடைக்கிடை எல்லாக்
கடைக்கும் அனுப்பினாய்!
அடைக்கும் வழிகளும்
உலகிடம் கோரினாய்!

சிங்களப் பௌத்த
மங்கையே கேள்நீ!
தொங்கு வாற்பேய்களின்
துணையுடன் நீசெய்யும்
பொங்கல் சுவைக்காது!
புலிநிலம் சளைக்காது!
எங்கள் தமிழன்
எழுவான் மீண்டும்!
தன்தாய் மண்ணைத்
தழுவி மகிழ்வான்!

மனிதத்தை மாய்க்கும்
மாயப் பிசாசே!
புனிதராம் புத்தரைப்
புதைக்கும் பிக்குகாள்!
எங்கள் இளைஞரை
இனிய மலர்களைக்
கொன்று குவித்திடும்
இராணுவப் பேய்காள்!

சக்கரை இதழையும்
சந்தனத் தொடையையும்
சொக்கிட அசையும்
சுந்தர இடையையும்
முக்கி முக்கி
முனகிக் கதறித்
திக்குற் தமிழிற்
திரைப் பாடலாக்கி
வக்கற்ற வாழ்விலே
வரலாறு படைத்திடும்
நக்கற் கவிஞனே!
நானுனக் குரைப்பேன்!
முக்கியக் குறிப்பொன்று
முடிந்துகொள்சேலையில்!

மக்கள் துயரமும்
மாண்புடை வீரமும்
இக்கால நிகழ்வடா!
இதை நீ பாடடா!
சுக்கல் இலக்கியச்
சோம்பேறிப் புலவா!
பக்கலில் நடக்கும்
பரணியைப் பாடாமல்
எக்காலங் கண்டு




இருமாந்து நிற்கிறாய்?

ஈழத் தமிழன்
எழுந்தான் படையாய்!
தமிழ் வாழத் தமிழர்
தரணியில் நிமிர!
கோழையுகத்தின்
குடலினை யுருவி
மாலையாய்ப் போட்டு
மரணத்தை வென்றான்!

நாளையுலகத்திற்கோர்
நல்ல தலைவனை
நாட்டிற்கும் உலகத்
தமிழர்க்கும் தந்தான்!

சங்கத் தமிழின்
சரக்குகள் பொறுக்கி
தன்னை நிரப்பும்
தறுதலைக் கலைஞா!

ஒன்று நான் சொல்வேன்!
உறுதியாய்ச் சொல்வேன்!

பனித்தளம் விலகும்!
பாறைகள் தகரும்!
இனிக்களப் போரில்
இமயங்கள் நகரும்!
பிணைத்த விலங்குகள்
பொடிப் பொடியாகும்!
பேடியர் கூட்டம்
படிப்படி ஓடும்!

விண்ணிற் கொடியெழும்!
மண்ணில் அரசெழும்!
கண்ணிற் கதிரெழும்!
காலம் கவிசொலும்!

அக்கரை வாழும்
அன்புச் சகோதரா!

உன்கை விரல்கள்
ஒருமுறை உண்மையின்
பொன் மை தொட்டுப்
பெருமையைப் பாடட்டும்!
தொன்மையில் உயிர்த்த
எந்தமிழன்னையின்
கண்கள் பனிக்கின்ற
காட்சியைக் காணட்டும்!
சங்கைத் தொடட்டும்!
சரித்திரம் ஆகிடட்டும்!
பங்கைச் செய்நீ!
பரணியைப் பெய்நீ!
சொந்தமண்விட்டு
வந்ததும் அந்தமண்
எந்தமண் என்று
இழிவுடன் கேட்கும்
மந்திகள் கூட்டமே!
மறக்காதீர் நீர் அன்று
வந்த பாதையை!
வாழ்க்கையில் இரத்தல்
செய்திரு என்று
சிறுமையைத் தேடாதீர்!
தலைக்குத் திரட்டித்
தம்மை வளர்க்கும்
கலைநதி முதலைகாள்!
கண்களைத் திறவுங்கள்!

கந்தையை உடுப்பினும்
கஞ்சியைக் குடிப்பினும்
தந்தை தாய் உலவிய
தாயகம் போற்றிடும்
சிந்தையிருப்பின்
செல்வம் அதுவாம்!

முந்தைநாட்கிடைத்த
மூட்டை முடிச்சுகள்
சொந்தமாகாது
சுதந்திரமாகாது!

ஆலயக் கதவுக்குள்
ஆதிக்கம் நடத்தும்
வாலிப உளங்களே
வாருங்கள் வெளியே!
சேலையைக் கொடுத்த
கண்ணனாய் மாறுவோம்!
சிதம்பர தாண்டவம்
நாங்களும் ஆடுவோம்!

கற்பனை கடந்த
சோதியாய் ஒளிர்வோம்!
கருணையோடு எம்
கடமையைச் செய்வோம்!

வந்து சேருங்கள்
தமிழர் அணியில்
வாழ்வோம் ஓரிரு
கணங்களாயினும்
எங்கள் இனத்துக்காய்
எதிர்ப்புகள் தகர்ப்போம்!
உண்மைப் பிறப்புக்காய்!
உலகையும் எதிர்ப்போம்!

– புலவர் –

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 10



மார்ஷல் சுய்கோவ்

1943இல் அவள் கம்யூனிஸ்டுக் கட்சியினுள் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். இராணுவத்திலிருந்து வந்ததும் ஆசிரியையானாள். 1949 முதல் கட்சி பணியில் இருந்தாள்.

எளிமையான, கருத்தாழமுள்ள பெண் மணியாகத் தோற்றமளித்த அவர், தன் போர்க்களத் தோழிகளைப் பற்றி மட்டுமே பேசினார்; அவரைப் பற்றி, அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதைப் பற்றி நான் நேரடியான கேள்விகளைக் கேட்ட போது மட்டுமே அவர் தன்னைப் பற்றி பேசினார்.

"என்னைப் பற்றியா?" என்று கேட்டு வியப்போடு தன் தோள்களைக் குலுக்கினார் அப்பெண்மணி. என்னைப் பற்றித்தானே நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். மமாயெவ் குன்றில் என்னுடன் கூட மீயா குலியாயெவா – கமீஷின் கிராமத்திலிருந்து வந்த சிறு பெண் இருந்தாள்; இச்சிறு பெண்ணுடன் சேர்ந்துதான் நான் 1942 செப்டம்பர் 12இல் தகவல் தொடர்பு மையத்திற்காக இடையறா குண்டு மழையின் கீழ் ஒரு பதுங்கிடத்தைத் தோண்டினேன். அப்பெண்ணோடும் பின் ஷூரா ஷெஷேனியா எனும் பெண்ணோடும் சேர்ந்து நான் தகவல் தொடர்பு சாதனத்தருகே கடமையில் இருந்தேன். நகரத்தில் வேறிடங்களில் தாயாவிதோவினா, லியூபா ஸ்துக்காலாவா, கிளாவ்தியா ஷ்தோன்தா, லேனா பிரிதோல்ச்சினா, இன்னும் சில பெண்கள் இருந்தனர்..... 1942 ஆகஸ்டு 31ஆம் திகதி என்ன நடந்ததென நினைவிலிருக்கிறது. யாப்லனிவ்யா பள்ளம். ஃபானிய ரேஸ்னிக் தம் தோழியுடன் கூடாரத்தில் கம்பியில்லாத் தொலைபேசி சாதனத்தின் அருகே அமர்ந்திருக்கின்றனர்; அது திறந்த வெளியிலிருக்கிறது, அருகில் சிறு அகழி மட்டும் இருந்தது.

நகரக் கூடாது என்பது அந்தத் தகவல் தொடர் வீராங்கனைகளின் மரபாயிருந்தது."

"பறந்து வந்த விமானங்களைப் பார்த்து, குண்டுகளின் ஊளை ஒலிகேட்டு, எங்கே அவை விழுந்து வெடிக்கும் என்று அபபெண்கள் தோராயமாக நிர்ணயித்தனர். ஒருமுறை, இரண்டுமுறை விமானங்கள் வந்து சென்றன. அவர்களோ தகவல் அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்.... விமானங்கள் மூன்றாம் முறை பறந்து வந்தன.... கூடாரமிருந்த இடத்தில் குண்டு விழுந்த குழி மட்டுமே எஞ்சியது."

"அன்று சம்பவங்கள் மிக விரைவாக நடைபெற்றதால் எங்களுடைய போர்க் களத் தோழியரைப் புதைக்கக்கூட முடியவில்லை. தம் கடமையைச் செய்து மாண்ட செஞ்சேனையின் சாதாரண வீராங்கனைகள் யாப்லனிவ்யா பள்ளத்தில் என்றென்றைக்குமாக மீளாத் துயில் கொள்கின்றனர்...."

தனது நெருங்கிய தோழியாகிய ஷூரா ஷெஷேனியாவைப் பற்றியும் அன்று ரஸூமேயெவா எனக்குச் சொன்னார்.

"யுத்தத்திற்கு முன் அவள் அனாதை குழந்தை இல்லத்தில் பணிபுரிந்தாள். செஞ்சேனையில் சேர விருப்பம் தெரிவித்த ஒரு சில கம்சமோல் நங்கைகளை இராணுவப் பதிவு அலுவலகம் அழைத்ததைக் கேள்விப் பட்ட ஷூரா நேரடியாக அனாதை குழந்தை இல்லத்தின் இயக்குனரிடம் சென்று தான் போர் முனை செல்ல விரும்புவதாக அறிவித்தாள்."

"1942 ஏப்ரல் இறுதியில் ஐந்து சக கம்சமோல் தோழிகளுடன் ஷூரா – அந்நேரத்தில் அவள் ஏற்கனவே கட்சியின் தேர்வு உறுப்பினராக இருந்தாள். – இராணுவப் பதிவு அலுவலகத்திற்குச் சென்றாள்.



"எதிரி குண்டுவீச்சு விமானங்களின் ஓசை அவர்களுக்கு கேட்கிறது. ஆனாலும், அவர்கள் இடத்தை விட்டு நகரவில்லை. பாசிஸ்டுகளின் தாக்குதலைப் பற்றி, எங்களுடைய படைப் பிரிவுகளில் ஒன்றின் பின்புறத்தில் எதிரி டாங்கிகள் நுழைந்து விட்டதைப் பற்றி உடனடியாகச் செய்தி அனுப்ப வேண்டும். ஃபானியாவோ, அவளருகேயிருந்த தோழியோ, யாருமே இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. என்ன ஆபத்து வந்தாலும் தோழியை விட்டு

"எல்லாப் பதிவு வேலைகளும் ஒரே நாளில் முடிந்தன, மே 2ஆம் திகதி இப் பெண்களை இராணுவத்திற்கு வழியனுப்பினர். ஆஸ்திரிகானில் ஒரு மாத தொலைபேசிஆப்பரேட்டர் பயிற்சிக்கு பின் ஷூரா, 115 வது வலுப்படுத்தப்பட்ட மண்டலத்தின் தனி தகவல் தொடர்புக் கம்பனிக்கு வந்து தோன் ஆற்றின் கரையில் ஆப்பரேட்டராக பணிபுரியத் துவங்கினாள். அன்று முதல் மிகக் கடினமான சூழ்நிலைகளில் கூட அவள் தன்னிடத்தை விட்டு நகரவில்லை.

"1942 செப்டம்பர் 13 ம் திகதி மமாயெவ் குன்றில் வலுப்படுத்தப்பட்ட மண்டலத்தின் தலைமைக்கும் ஜெனரெல் பஷர்ஸ்கிக்கும் இடையில் தொடர் பேற்படுத்தப்பட்டது. அன்று ஒரு நிமிடம் கூட அமைதி நிலவவில்லை. சாதாரண மாடர் பீரங்கிகள் இடையறாது சுட்டுத்தள்ளிக் கொண்டிருந்தன. தகவல் தொடர்பு அறுபடாமல் காப்பது கடினமாயிருந்த போதிலும் அதைக் காத்து வந்தனர்.

"பகல் 3 மணிக்குத் தகவல் தொடர்பு கம்பிகளைப் பரிசோதிக்கும் எல்லோரும் தம் பணிக்காக வெளியே சென்றிருந்தனர்.

"துண்டிக்கப்பட்ட கம்பியை சரிசெய்ய வெளியே செல்ல யாரும் இல்லாத நிலையில் ஷூரா தகவல் தொடர்புக் கம்பனி கமாண்டரிடம் சொன்னாள்.

"எனக்கு அனுமதி கொடுங்கள், நான் போகிறேன், நானின்றியே இங்கு சமாளித்துக் கொள்வார்கள்.

"கம்பி துண்டிக்கப்பட்ட இடத்தைக் கூட நீங்கள் அடைய முடியாதபடி குண்டு வீச்சு நடக்கிறது."

'என்னால் முடியும் தோழர் லெப்டினன்ட் அவர்களே, நீங்கள் மட்டும் அனுமதி கொடுங்கள்' என்று வற்புறுத்தினாள் ஷூரா.

"கம்பனி கான்டர் அனுமதியளிப்பதும் ஷூரா அங்கே தொலைபேசி சாதனத்தின் அருகேயிருந்த சக தோழியை கிள்ளி விட்டு (இது விடைபெறுவதற்கான அடையாளம்.) பதுங்கிடத்திலிருந்து ஊர்ந்தபடியே வெளியேறினாள்.

"ஷூரா ஒருசில தடவைகள் கம்பிகளை இணைத்துப் பேசினாள். அன்று மமாயெவ் குன்றில் இருந்து உயிர் பிழைத்த சிலருக்கு செப்டம்பர் 14ம் திகதி நடுப்பகலில் தகவல் தொடர்பு மீண்டும் அறுபட்டது நினைவில் இருக்கிறது. பின்னர் ஷூராவின் குரல் கேட்கவேயில்லை....".

எங்களுடைய தகவல் தொடர்பு வீராங்கனைகள் எப்படிப்பட்ட சூழ் நிலைகளில் வாழ்ந்தனர், வேலை செய்தனர் என்று நான் அடிக்கடி எண்ணிப் பார்ப்பதுண்டு. போர் நடந்த நகருக்கு யாரும் அவர்களுக்காக பதுங்கிடங்களையும் மறைவிடங்களையும் கட்டித்தரவில்லை. அவர்களே தனியாக அல்லது ஒன்றுசேர்ந்து பூமியில் ஒரு மறைகுழி தோண்டி, கைக்குக் கிட்டியதை மேலே கூரையாக அமைத்து மாதக்கணக்கில் அங்கிருந்தனர். பல சமயங்களில் அங்கேயே உறங்கினர்.

அக்டோபரில் எதிரி எல்லாப் படைத் தலைமையகப் பதுங்கிடங்களையும் அழித்தபோது வலது கரையில் பெண்களுக்கான சூழ்நிலைகள் இன்னமும் கடினமானவையாக மாறின. புழுக்கமான, நெருக்கமான மறைவிடங்களை அவர்கள் தம் பணியை செய்தனர். திறந்த வெளியில் ஓய்வெடுத்தனர்; மாதக்கணக்கில் வெந்நீரைக் கண்களால்கூடப் பார்க்கவில்லை.

...... தமாரா ஷ்மாக்கொவா பத்யூக்கின் டிவிஷனில் இருந்தாள். அவளை எனக்கு நன்கு தெரியும். கையைக் கூட உயர்த்த முடியாது என்று தோன்றிய போது முன்னணியில் படுகாயமடைந்தவர்களைச் சுமந்து வந்து காப்பாற்றினாள். இதனால் அவளை எல்லோரும் அறிந்திருந்தனர். தரையோடு தரையாக ஊர்ந்து காயமடைந்தவனை அடைந்த தமாரா அவன் அருகே படுத்தபடியே கட்டுப் போட்டாள். என்ன மாதிரி காயம் என்பதைப் பார்த்து, என்ன செய்யவேண்டுமென முடிவு செய்தாள். படுகாயமடைந்தவனாயிருந்து, அவனைப் போர்க்களத்திலேயே விட்டுச் செல்லக் கூடாத நிலையிலிருந்ததால், தமாரா குனிந்து, அவனைத் தன் முதுகில் சுமந்து – பல நேரங்களில் அவ்வாறு அவள் சுமந்து சென்ற போர் வீரனின் எடை அவளுடைய எடையைவிட ஒன்றரை, இரண்டு மடங்கு அதிகமாயிருந்தது – சென்றாள். காயமடைந்தவனைத் தூக்கக்கூடாது என்ற நிலையிலிருந்ததால், அவனை கெட்டியான துணியில் படுக்க வைத்து இழுத்துச் சென்றாள்.

தமாரா ஷ்மாக்கொவா பல உயிர்களைக் காப்பாற்றினாள். அச்சண்டைகளில் பிழைத்து இன்று உயிர்வாழுபவர்களில் பலர் தமாராவிற்கு நன்றிக் கடன் பட்டவர்கள். மரணத்தின் வாயிலிருந்து திரும்பி வந்தவர்களில் பலருக்கு இப்பெண்ணின் பெயர் கூடத் தெரியாமல் போனதுண்டு. இன்று இப்பெண்மணி குர்கான் பிரதேசத்தில் மருத்துவராயிருக்கிறார்.

தமாராவைப் போன்ற வீராங்கனைகள் 62வது படையில் பலர் இருந்தனர். 62வது படையின் பல்வேறு பிரிவுகளிலிருந்த 1,000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு விருதுகள் வழங்கப் பட்டன. இவர்களில் மீயா உலியானவா (இவர் தற்காப்பின் ஆரம்பம் முதல் இறுதி வரை சார்ஜன்ட் பாவ்லவின் வீட்டிலிருந்தார்.) வால்யா பஹோமவா (இவர் போர்க்களத்திலிருந்து நூறுக்கும் மேற்பட்ட காயமடைந்த வீரர்களைக் காப்பாற்றினார்.) நாதியா ஜார்க்கீஹ் (இவருக்கு செம்பதாகை விருது வழங்கப்பட்டது), மருத்துவர் மீயா வெல்யாமீதவா (இவர் முன்னணியில் குண்டு மழையின் இடையில் பல நூறு போர்வீரர்களுக்கும், கமான்டர்களுக்கும் கட்டுப்போட்டார்), இன்னும் பலர் அடங்குவார்கள். சீனியர் லெப்டினன்ட் திரகானின் படைப் பிரிவு எதிரியால் சுற்றி வளைக்கப்பட்ட போது, காயம்பட்ட பல டஜின் கார்டு வீரர்களுக்குக் கட்டுப்போட்டு, கையில் பஞ்சுடன் காயமடைந்தவனின் அருகிலேயே குருதி சிந்தி மாண்ட லியூபா நேஸ்தெரேன்கோவை மறக்க முடியாது.

தொடரும்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ரத்வத்தவுக்கு தனிப்பட்ட ரீதியில்

# அவசியமாகிவிட்ட யுத்தத்தில் வெற்றி

"யுத்தத்தை எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் முடிவுக்கு கொண்டு வருவேன்."

*– அமைச்சரவைக் கூட்டத்தில் ரத்வத்த கூறியதாக "லங்காதீப"*

"யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தால், எதிர்காலப் பிரதமராகும் தகுதி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கே உரியது"

*மல்வத்தை பீடாதிபதி கூறியதாக – திவயின*

**யு**த்தம், நவம்பர் மாதத்திற்குள் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்பது சில வாரங்களாக அரசாங்கத் தரப்பினர் கூறும் புதியதொரு காலக்கெடுவாகும். மாகாணசபைத் தேர்தல்களை அரசாங்கம் ஒத்திவைக்க முற்பட்டபோதுதான் – இக்காலக்கெடு தொடர்பான முதல் அறிவிப்பு அரச தரப்பில் இருந்து வெளிவந்தது.

அதாவது, தற்போது இடம்பெறும் பாரிய இராணுவ நடவடிக்கையான ஜயசிக்குறு நடவடிக்கை நவம்பர் மாத இறுதிக்குள் முடிவுக்கு கொண்டு வரப்படும். அதுவரையில் மாகாணசபைத் தேர்தலுக்கு பாதுகாப்பு வழங்குவது கடினமாகும். அவ்வாறு வழங்குவதானால், இராணுவ நடவடிக்கை பாதிக்கப்படும் என்பதே அரசாங்கத் தரப்பின் நிலைப்பாடாகும்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருதல் என்பது இன்று சந்திரிகா அரசாங்கத்தைப் பொறுத்து ஜயசிக்குறு நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வருதல் என்பதே ஆகும். அத்தனை தூரம் ஜயசிக்குறு நடவடிக்கை இன்று அரசிற்கு நெருக்கடி மிக்கதொன்றாக மாறியுள்ளது.

இரு மாதங்களுக்குள் முடிவுக்கு கொண்டு வரப்படும் எனத் திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட ஜயசிக்குறு நடவடிக்கை இன்று ஒரு வருடமும் இரண்டு மாதங்களும் முடிந்து நீண்டு செல்வது மட்டுமல்ல, திட்டமிட்டதற்கு மாறாக இராணுவ பொருளாதார இழப்புக்களையும் தேவையையும் ஏற்படுத்தும் ஒன்றாக மாறியும் உள்ளது.

20,000 படையினருடன் முடிக்கப்படும் எனத் திட்டமிடப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையில் இன்று இரட்டிப்பு

– ஜெயராஜ் –
(தமிழீழம்)

மடங்கு துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதேசமயம் இந்நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள இழப்பானது சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்து விரலுக்கு விஞ்சிய வீக்கமாகவே மாறியுள்ளது. இந்நிலையானது இந்நடவடிக்கையை இவ்வாண்டுக்குள் முடிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை – இராணுவ அரசியல் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது என்றே கூறலாம்.

அரசியல் ரீதியில் யுத்த வெற்றியே அரசாங்கத் தரப்பின் முழுமையான தேவையாக உள்ளது. இதைத் தவிர சந்திரிகா அரசு கூறிக் கொள்வதற்கென எதுவுமில்லை. அதாவது கடந்த தேர்தலின்போது அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றியதாக இல்லை. இது தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகள், கண்டனங்கள் என்பனவற்றிற்கு யுத்தத்தையே அரசாங்கம் சாட்டாக வைத்துக் கொண்டுள்ளது.

ஆனால், நீண்ட காலத்திற்கு இதனைக் கூறிக்கொண்டு அரசாங்கத்தினால் காலம் தள்ளிவிட முடியாது. ஏனெனில் யுத்தம் என்பது நாட்டின் பொருளாதாரத்தையே முழுமையாக விழுங்கி வருகின்றது.

இதனால் மக்கள் பெரும் சுமைகளை சுமக்க வேண்டியதாக உள்ளது.

அதாவது 500 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட பணத்தை யுத்தத்திற்கு வருடாந்தம் செலவிட வேண்டியுள்ளது. இது நாட்டின் வருமானத்தில் 30 சதவீத அளவிற்கும் அதிகமானதாகும் என அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே கூறியும் இருந்தார். இந்த நிலை தொடருமானால் நாடு குட்டிச் சுவராவது த வி ர க் க முடியாததொன்றாகவே இருக்கும். ஏற்கனவே சிறிலங்கா உலகிலுள்ள 40 மிக வறிய நாடுகளின் பட்டியலில் சேர்ந்து கொண்டுள்ளது.



இந்நிலையில் தொடரும் யுத்தமானது மக்கள் மீது ஏற்றும் பெரும் சுமையினால் மக்கள் அரசிற்கு எதிராக குரல் எழுப்புவது தவிர்க்க முடியாது போகும். இதேவேளை ஜயசிக்குறு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்புக்களும் களைப்புக்கும் சோர்விற்கும் உள்ளாகியுள்ளன. ஒருபுறம் நீண்டகால நடவடிக்கை என்றரீதியில் மட்டுமல்ல, பாரிய . இழப்புக்கள் பலவற்றை அது சந்தித்துள்ளமையும் இவ்வருட நவம்பருக்கு அப்பாலும் நடவடிக்கை தொடருமானால், மற்றொரு மாரி காலத்திலும் வன்னியில் போரிடும் நிலையில் இராணுவம் இருக்க வேண்டி வரும். அனால் இதனை இராணுவம் விரும்புவதாக இல்லை.

இதனைத் தவிர நீண்டகாலமாக நீடித்துச் செல்லும் இந் நடவடிக்கை யானது நவம்பர் மாதத் திற்கும் முடிவடையாது போகுமானால், அடுத்த ஆண்டிலும் நடவடிக்கை தொடர வேண்டி வருவதோடு ஜயசிக்குறு இரண்டாவது ஆண்டிலும் பிரவேசிக்க வேண்டியும் வரலாம் எனவும் கருதப்படுகின்றது. இது சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்தும் அதன் தலைமையைப் பொறுத்தும் அவமான கரமானதாகவே இருக்கும். இந்த நிலையை அடுத்த ஆண்டின் முற்பகுதியில் ஓய்வு பெற உள்ள இராணுவத் தளபதி விரும்பமாட்டார் என்றே கூறலாம்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் எவ்வாறேனும் நவம்பர் மாதத்திற்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த தீவிர அக்கறை காட்டுகின்றார். அத்தோடு நவம்பருக்குள் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய தேவையானது தனியாக அரசிற்குரிய நெருக்கடியினால் மட்டுமல்ல, இன்று தென்னிலங்கை அரசியலில் குறிப்பாக சுதந்திரக் கட்சிக்குள் தனது நிலையினை உறுதி செய்ய வேண்டிய நிலையிலுள்ள அமைச்சர் ரத்வத்தவுக்கு தனிப்பட்ட ரீதியிலும் அவசியமானதாகவே உள்ளது.

அதாவது, சுதந்திரக் கட்சிக்குள் அனுரா பண்டாரநாயக்காவை மீண்டும் கொண்டு வரவும் அவருக்கு பிரதமர் பதவியைப் பெற்றுக் கொடுக்க மேற்கொள்ளப்படும் முயற்சியுமே ரத்வத்த தனது நிலையை சுதந்திரக் கட்சிக்குள் உறுதி செய்ய வேண்டிய நிலையை உருவாக்கி உள்ளது எனலாம்.

நீண்ட காலமாகவே சுதந்திரக் கட்சியின் இரண்டாவது இடம் யாருக்கு என்பதும் – அடுத்த பிரதமர் பதவி யாருக்கு என்பதும் கேள்விக்கும் சர்ச்சைக்கும் உரிய ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. இவை இரண்டிலும் அனுருத்த ரத்வத்தவும் குறியாகவே இருந்து வந்துள்ளார்.

ஆனால், தற்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அதனை விரும்பவில்லை. அவர் அப்பதவியை அனுரா பண்டாரநாயக்காவைக் கொண்டு நிரப்பவே விரும்புகிறார். இந்த நிலையில் அமைச்சர் ரத்வத்தவக்கு சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒரு இடஞ்சல் மிக்கவராகவே உள்ளார்.

தற்பொழுது சிறிமாவின் உடல்நிலை மோசமடைந்து சென்று கொண்டிருப்பதோடு – அநுராவை மீண்டும் கொண்டு வருவதற்கு ஒருபுறம் முயற்சிக்கப்படுகிறது. இந்த நிலையில்தான் ரத்வத்தவுக்கு தன் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு பலமான அரசியல் தளம் ஒன்று தேவையாக உள்ளது. அதாவது அரசியலில் தனது நிலையை உறுதி செய்ய் வேண்டிய கட்டாயம் அவருக்கு எழுந்துள்ளது.

இதனைத் தற்போதைய நிலையில் யுத்தத்தை வெற்றி கொள்ளுவதன் மூலமே சாதிக்க முடியும் எனக் கருதுகிறார் அவர். யுத்தத்தில் வெற்றி பெறுவதன்மூலம் பௌத்த பேரினவாதத்தின் செல்வாக்கையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் நம்புகிறார். அத்தோடு தனது அணுகுமுறைக்கு ஆதரவு தேடும் முயற்சியிலும் இறங்கிவிட்டார் என்பதையே அண்மைய சம்பவங்கள் உணர்த்துகின்றன.

இதன் வெளிப்பாடே மல்வத்த பீடாதிபதி 'யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தால் எதிர்காலப் பிரதமராகும் தகுதி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தவுக்கே உரியது' என்ற அறிவிப்பாகும். இது ஒரு வகையில் ரத்வத்த யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வது சரி என்பதையும் அவருக்கு பிரதமர் ஆகும் தகுதி உண்டு என்பதையும் வலியுறுத்துவது போன்றதாகும்.

இந்த நிலையில்தான் யுத்தத்தை எவ்வாறெனினும் நவம்பர் மாத இறுதிக்குள் முடித்துவிட ரத்வத்த பகீரத முயற்சி மெற்கொண்டுள்ளார். இது தனியாக சந்திரிகா அரசுக்கு மட்டுமல்ல அமைச்சரின் தனிப்பட்ட அரசியல் எதிர்காலத்திற்கும் அவசியமாகிறது என்கிற நிலையில் போர் முனையில் வெற்றி குறித்த தகவல், அமைச்சர் ரத்வத்தவினால் எதர்பார்க்கப்படும் ஒன்றாகவே உள்ளது.

ஆனால் சந்திரிகா அரசாங்கத்தினதும் அமைச்சர் ரத்வத்தவினதும் விருப்புக்கேற்ற விதத்தில் இதுவரையில் யுத்தகளம் வளைந்து கொடுக்கவில்லை என்பதையே ஜயசிக்குறு நடவடிக்கை பதின்நான்கு மாதங்களைத் தாண்டி நிற்கின்றது. இந்த நிலையில் நவம்பர் மாதக் காலக்கெடு எத்தனை தூரம் சாத்தியமானதாக இருக்கும் என்பதை தற்பொழுது அவருடம் கூறுவது பொருத்தமாயிராது. ★

## சிறுகதை

**வெ**டிஓசை கேட்ட, வற்றுக்குளப் பறவைகள்போல், செய்தி கேட்ட மாத்திரத்தில் அந்த ஊரைவிட்டு வெளியேறி நடந்தார்கள் அக்கிராம வாசிகள். மீண்டும் சிங்கள வெறியாட்டம் உச்சம் கண்டு ஆடியது.

ஓய்வுபெற்ற ஆசிரியர் ஜோசப், தமது மனைவியையும் மகளையும் அழைத்துக் கொண்டு ஊர்ச் சனங்களோடு அவசர அவசரமாகக் கிளம்பினார். ஆளுக்கொரு பைகள் மட்டும் தோளில் தொங்கின.

இரண்டே இரண்டு கண்களைப் போன்று இரண்டே இரண்டு பிள்ளைகள் அவர்கட்கு. மூத்தவன் அன்ரனி. லண்டனில் சிறிய தகப்பனாரோடு ஓர் வங்கியில் பெரிய உத்தியோகம் – பல தடவைகள் அவர்கள் அனைவரும் ஜோசப் அவர்களை அங்கு அழைத்தும் அவர் செல்லவில்லை. இந்த வகையில் தந்தை தாய் பிள்ளை மூவருக்கும் ஓர் இறுக்கமான ஒருமைப்பாடு.

பௌத்தம் வாழும் நாட்டிலே அன்பையும் அமைதியையும் எரித்துவிட்டு அரச உயர்பதவிகளுக்காக இனவெறியை விதைத்து அறுவடை செய்யும் சிங்களம்– நாட்டை அக்கினிக் களமாக்கிய பின்னரும் –அந்தக் குடும்பம் தனது ஆணிவேரை அறுத்துக்கொண்டு விதேசங்களில் வேற்றுமுகத்தோடு வாழ விரும்பவில்லை.

ஜோசப் தமது மகளை பரிசுத்த மேரி மகளிர் பாடசாலையில் பயிலவிட்டிருந்தார். திரேசா அங்கே உயர்வகுப்பு மாணவி. அருட்சகோதரிகள் பிற குழந்தைகள் மீது செலுத்தும் ஆழ்ந்த கரிசனையும், அன்பும், ஆற்றும் சேவையும் – அவளை வெகுவாகக் கவர்ந்திருந்தது. அந்த அற்புதசேவா உணர்வு அவள் இதயத்தில் தளிர்விட்டது. இதனாலோ என்னவோ மாலை நேரங்களில் அவள் தனது வீட்டைச் சுற்றியிருந்த சிறார் சிறுமிகளுக்கு வகுப்புகள் நடத்தி வந்தாள். இதில் ஓர் ஆனந்தத்தையும் கண்டாள்.

அவள் தமையன் அன்ரனி திரேசாவுக்காகவே கனவு கண்டு கொண்டிருந்தான். கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு கலாசாலைக்குச் சென்று ஒரு டாக்டராக வெளியேறிய பின்னர் லண்டனுக்கு அழைத்துவிட வேண்டுமென்று எண்ணமிட்டான். பெற்றோர்களின் விருப்பமும் அவ்வாறாகவே இருந்தது.

அன்றிரவு நீடித்த நடைக்குப் பின்னர் ஆறியிருந்த இடத்திலேயே ஜோசப் கண்ணயர்ந்து போனார். திரேசாவும் தாயும் இமைதாழ்த்தாமல் தமக்கும் அயலவர்க்கும் ஏற்பட்ட அவலத்தை எண்ணி கண்கலங்கினர். சகோதரத்துவம் பேணி காலாகாலமாக நம்பி வாழ்ந்த பேரினத்தின் மீது மனதாலும் விரோதம் பாராட்டாத தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் கொடுமைகள் உயிருள்ள வரை மறக்கப்படுமா? அதன் வடுக்கள் வரலாற்றையே இரத்தக்கறை படிந்ததாக்கி விட்டன.

அத்தோடு தமது இல்லத்தைப் பற்றிய கவலையும் அவர்களைக் கடித்துக் குதறியது. ஜோசப் தமது காலத்தில் எதையும் தேடி வைத்தவரல்லர். உழைத்த உழைப்பு– உண்டு வாழ்வதற்கும் பிள்ளைகளைப் படிக்க வைப்பதிலேயேயும் செலவானது. மூத்தவன் வெளியில் சென்ற பின்னர்தான் வீடு சற்று அவசிய தேவையான பொருட்களோடு சோபை பெற்றது. ஆனால், இப்போது அத்தனை பொருட்களும் சிங்களப் படைக்குத் தாரைவார்க்கப்பட்டுவிட்டது.

ஜோசப் கண்விழித்தவாறு சிந்தனையில் ஆழ்ந்தார். வீட்டைவிட்டு வெளியேறியதும் ஐந்து மைல்களுக்கு அப்பாலுள்ள நகரத்துக்கு நடந்திருக்கலாம். ஆனால், நேற்றுமுன்தினம் அங்கு ஓரிடத்தில் நிகழ்ந்த சம்பவம் எத்தனை கொடூரமானது. ஒரு பூசகரும் இரண்டு உதவியாளர்களும் சிறிமாபுரத்தைச் சேர்ந்த ஊர்காவல்படை காடையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். வழியில் ஒரு தமிழர் வெட்டிக் கிழித்து வீசப்பட்டார். இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு எப்படி நகர்ப் பக்கம் போவது...

o o o o o o o


ஒரு வாரமாக நடந்து அலைந்துவிட்டு, கடல் கடந்து முல்லைத்தீவு வந்து சேர்ந்தார்கள் ஜோசப் குடும்பத்தினர். முகாமெங்கிலும் இடநெருக்கடி ஒரு பிரளயமே தோன்றிவிட்ட ஜாடையில் நிகழ்வுகள் தெரிந்தன. இந்த நிலையில் ஒரு சிறியவீடு வாடகைக்கு கிடைத்தது ஜோசப்புக்கு.

அவர்களின் ஊரைப் போன்ற அமைதியான கிராமம் அது. தென்னையும் மாவும் பலாவும் மருவி வளர்ந்த ஓவியம்போல் இருந்தது அக்கிராமம். சாலை ஓரமாக அமைந்திருந்த வித்தியாலயம். அங்கிருந்து நிமிர்ந்து பார்த்தால் மாதாவின் திருவாலயம் ஓங்கி வானளாவி நிற்கும். திரேசா அந்தப் பள்ளிக்கூடத்தில் இணைந்தாள். போகிற வழியில் மாதாவைத் தரிசித்துவிட்டே கல்லூரிக்குச் சென்றாள். வேதநூல்களை தேடிப் பயின்றாள். மாதாவின் அன்புவதனம் அவளுக்குச் சேவை உணர்வைத் தூண்டியது.




முன்புபோல் இங்கும் அவள் குழந்தைகளுக்கு கல்வியூட்டினாள். இடம்பெயர்ந்து வந்து மாதா கோயிலில் தஞ்சம் புகுந்த குடும்பங்களில் பிள்ளைகளுக்கு இனாமாகவே கொப்பி – பென்சில்கள் தந்து கற்றுக் கொடுத்தாள். அவர்களின் அவலங்களை தங்கள் நிலையோடு ஒப்புநோக்கினாள்.

அன்று தமையன் அன்ரனியிடமிருந்து வந்த கடிதத்துக்குப் பதில் வரைந்தாள். அந்தக் கடிதத்தில் அவள், 'என்னை ஒரு டாக்டராகவோ அல்லது எக்கவுண்டனாகவோ பார்க்கத் துடிக்கிறீர்கள் அண்ணா.



ஆனால், இவையாவும் எனது மனத்தை தேற்றுமா என்பது கேள்விதான். ஒன்றை மட்டும் உறுதி கூறுகிறேன். என்னை ஒரு அருட்சகோதரியாகவே காணப் போகிறீர்கள். அப்போதும் என் விடயத்தில் சந்தோஷப்படுவீர்கள் என்பது உறுதி.

தனக்குத் தானே தீர்ப்பு வழங்கிவிட்ட கடிதத்தை மேலும் ஒரு முறை வாசித்துவிட்டு திருப்தியடைந்தாள். கனவுகள் பலிக்க இன்னும் ஓராண்டு இறுதிவகுப்பில் இருக்க வேண்டும். பின்னர் கன்னியாஸ்திரிமடம். அதன் பின்னர் பல படிகள் கடக்க வேண்டும்.

அரசின் மிலேச்சத்தனமாக குண்டுவீச்சு வன்னி மக்களின் சிரசு மீது நிகழ்ந்துகொண்டிருந்தது. ஒரு தனி மனிதனைக்கூட விமானத்தை ஓட்டிக் கொண்டு தேடியலைந்தார்கள் இரத்த தாகம் பிடித்த சிங்கள விமானிகள். இதுவும் இறந்துபோன ஜடங்கள்.

அன்று திங்கட்கிழமை காலைவேளை. பின் வாங்கி மறையும் பனியைத் தழுவிக்கொண்டு வரும் தென்றல் சீதளநடைபோட்டது.

மல்லிகைப் பூக்களைக் கொய்து தார்ச்சாலையில் சிந்திவிட்டது மாதிரி கல்லூரியைச் சேர்ந்த சிறார் சிறுமிகள் நகர்ந்துகொண்டிருந்தனர். திரேசா கோவிலுக்குக்குச் சென்று திரும்பி கல்லூரிக்குள் புகுந்தாள்.

தூரத்தே கேட்ட விமான ஒலி நெருங்கி வந்தது. தெரு கிடுகிடுத்தது. சிறுவர்கள் அலறி அடித்தபடி அங்குமிங்கும் ஓடினர். விழுந்துபடுக்கும்படி சப்தித்தார்கள், பெரியோர்கள். தாமும் கான்களில் வீழ்ந்து படுத்தனர். இப்படி ஒரு காட்சியில் தான் அசுர கணங்கள் ஆனந்தப்படும்போலும்....

அடுத்த கணமே தாழப் பறந்த விமானம் கோயில் முகப்பில் இரண்டு குண்டுகளை உமிந்துவிட்டு மேலே எழுந்து சென்றது. இரைச்சல், குண்டு முழக்கம் யாவும் அந்தக் கிராமத்தையே தூக்கி வீசியது மாதிரி இருந்தது.

சே! அற்ப மனித ஜந்துக்கள்! இறைவன் தனது ரூபத்தில் இந்த இரண்டு கால் மனித பிராணியைப் படைத்ததாக பெருமைப் பட்டுக்கொள்கிறார்கள் ஆன்மீகவாதிகள். கடவுளின் திரு உருவத்துக்கே ஒரு சாபக்கேடு.

மின்னலோடு கூடிய முழக்கத்தின் பின்னர் கோயில் முற்றம் இரத்தச் சேறாகியது. சிறார், சிறுமியர், பெரியமனிதர், பெண்கள் என்ற பேதமற்று, பிய்த்து வீசப்பட்டுக் கிடந்தார்கள் அகதிகள். இடிபாடுகளுக்கிடையே சிக்கியரவர்களின் அவலக் குரல்....

திரேசா எங்கும் ஒளிந்து கொள்ளவில்லை. சிலையாக இறுகி நின்றவாறே கோயில் முற்றத்தை நோக்கினாள். யந்திரமாகவே மாறி கோயிலை நோக்கி பாய்ந்தோடினாள். அவள் நின்ற இடத்திலேயே அவளது நூல்கள் சிந்திக் கிடந்தன. காட்டுமிராண்டி ஆட்சியிலே ஆன்மீக ஆலோசனைகள் எத்தனை துச்சமானது. அசுர தாண்டவங்களை அழித்தொழிக்க ஆண்டவனே ஆயுதபாணியாகவில்லையா! அநீதியை ஆயுதங்களால்தான் தவிர்க்கலாம் என்ற புரட்சி வேதாந்தம் எத்தனை உண்மையானது. உயர்வானது. இதனை வெறுப்பதாகச் சொல்பவர் வெறும் ஆஷாடபூதி – அயோக்கியத்தனம்.

அவள் உள்ளம் தத்துவ விசாரணையில் திளைக்க, கண்ணீர் சிந்தியவாறு சிதறிய உடற் பாகங்களை ஒன்று சேர்த்தாள். அவளது வெள்ளை யூனிபோம் இரத்தத்தால் நனைந்தது.

திரேசாவின் தந்தை அவளைத் தேடிக்கொண்டு கல்லூரிக்குச் சென்று

**க. ச. அரியநாயகம்**

விட்டு கோயிலுக்கு ஓடோடி வந்தார். அவர் அங்கு கண்ட காட்சி அசாதாரணமானது. இருதயத்தை ஒரு இரும்புக் கையால் பிளிவது போன்றிருந்தது. தமது அறுபத்திமூன்று ஆண்டுகாலத்தில் எங்கும் கண்டிராத கொடிய வெறியாட்டத்தின் விளைவு....

அவள் இரண்டு நாளாக உணவு உண்ணவில்லை. மனம் ஏதோ ஒரு பிரமையில் இயங்கியது. அவள் விழிகளில் மலரும் நித்திரையைக் கூட அந்த விமான அனர்த்தம் அள்ளிக் கொண்டு சென்று விட்டிருந்தது. உணவு ஊட்டுவதற்காக கெஞ்சி நின்ற தாயிடம் சொன்னாள். ***"அம்மா நாம் எங்கு சென்றும் அமைதியாக வாழமுடியாது வெளிநாடு சென்றாலும் நாம் மண்ணை மறந்து நிம்மதியாக வாழமுடியாது. அதனால்தான் இந்த முறை...... என் கடமையை..... நான் இப்பொழுதுதான் உணர்ந்து கொள்கி றேன்..."*** ★

www.tamilarangam.net



# "போர் என்றால் போர்" சொன்னது ஜே.ஆர். அல்ல! சந்திரிகா!!



## பேரினவாதத்தை தலைமையேற்றுள்ள இளமகளின் சபதம்

கறுப்பு யூலையின் குருதித்தடம் பதிந்த வேதனைத் தழும்புகளை, துப்பத்தின் ரேகைகளை, சோகத்தின் சுமையை தமிழினம் மீண்டும் உணர்வில் உணர்ந்து, அந்த இருண்ட வரலாற்றை நினைவு கூருகின்ற பொழுது இது. பௌத்த சிங்களப்பேரினவாத ஆட்சியாளர்களின் இன அழிப்புத்திட்டத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் விஞ்சி, வரலாற்றில் துருத்திக் கொண்டிருக்கின்ற தமிழரின் துன்பம் 1983இல் சற்று அதிகமானது.

வீதிகளில் வீடுகளில் கோவில்களில் கடைகண்ணிகளில் படமாளிகைகளில் பஸ்தரிப்பு நிலையங்களில் எல்லாம் தமிழர்கள் வேட்டையாடப்பட்டனர். விரட்டிவிரட்டிக் கொல்லப்பட்டனர். வெட்டப்பட்டனர் குத்தப்பட்டனர் குற்றுயிராய் தீயில் வீசப்பட்டனர்.

தமிழரின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பெண்கள் பலநூற்றக்கணக்கில் சிங்களக் குண்டர்களால் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாகினர்.

வெளியில் தமிழர்கள் வேட்டையாடப்படுவது வெளியில் ஒருபுறம் அரங்கேற மறுபுறத்தே, வெலிக்கடை வெஞ்சிறையில் அடைத்து வைக்கபட்ட தமிழர்கள் நிராயுதபாணிகளாய் நிற்க, ஆயுதபாணிகளாய் பாய்ந்த சிக்களக் குண்டர்கள் மோசமான காட்டு மிராண்டித்தனமான தாக்குதலை நடத்தினர், தமிழர்களைக் கொன்று குலூகலித்தனர். யூலை 25இல் நடத்தப்பட்ட இந்த நரபலியில் திருப்தியடையாத சிங்கள இனவெறிப் பிசாசு, மறுநாள்விட்டு மறுநாள் மீண்டும் அதேசிறையில், அதே நிராயுதபாணித் தமிழர்கள்மீது தனது கோரப்பற்களை ஆளமாகப் புதைத்தது. வெலிக் கடைச்சிறையில் மாத்திரம் இருகட்டங்களாக நடத்தப்பட்ட இக்கோரத்தாண்டவத்தில் 53 தமிழ்அரசியல் கைதிகள் உயிர்பலியாகினர்.

சிறீலங்காவின் தலைநகரிலும், மலையகத்திலும் சிங்களப்பகுதிகள் யாவிலும் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கையில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக விரட்டப்பட்டனர். கோடிக்கணக்கான தமிழர் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

இந்தக் கொடுமை நடந்து, பதினைந்து வருடங்கள் கடந்துவிட்டன. அன்று, இனக்கலவரம் என்ற பெயரில், தமிழினம் அழிக்கப்பட்டது. அரசாங்கப்படையினர் பார்த்திருக்க, பாதுகாத்திருக்க, திட்டம் பிசகாமல் குண்டர்களைக்கொண்டு நடத்திய இனஅழிப்பு நடவடிக்கைகளே அன்று நடைபெற்றன.

ஆனால் இன்று, இனஅழிப்பே, அரசாங்கத்தின் பகிரங்கமான அங்கீகாரத்ததுடன், அறிவிப்புடன் அரசாங்கத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இன்று சிங்களக் குண்டர்கள் இதற்குத் தேவைப்படுவதில்லை என்பதல்ல. அரசாங்கப்படையினரே குண்டர்களின் பாத்திரத்தில். சீருடையணிந்து, நவீன ஆயுதங்கள் காவி, நவீனவசதிகளுடன் இனஅழிப்பு விருத்தியடைந்திருக்கின்றது.

இன்றைய இனஅழிப்பிற்கு சந்திரிகா சூட்டியிருக்கும் பெயர் சமாதானத்துக்கான யுத்தம். இனஅழிப்பே சமாதானத்துக்கு வழி என்னும் பொருளில் அனைத்துக் காரியங்களும், சிறீலங்கா சிங்களப் பாராளுமன்றம் ஆக்கிக்கொடுத்த கறுப்புச் சட்டங்களின் துணையுடன், அனைத்துலக ஆயுதவியாபார நாடுகளின் ஆசியுடன் நடத்தப்பட்டுவருகின்றது.

இதுவரை ஏற்ற ஒப்பனை தற்போதைய சூழ்நிலையில் ஒத்துவருவதாய் இல்லை.

**இன்று, இனஅழிப்பே, அரசாங்கத்தின் பகிரங்கமான அங்கீகாரத்ததுடன், அறிவிப்புடன் அரசாங்கத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இன்று சிங்களக் குண்டர்கள் இதற்குத் தேவைப்படுவதில்லை என்பதல்ல. அரசாங்கப்படையினரே குண்டர்களின் பாத்திரத்தில். சீருடையணிந்து, நவீன ஆயுதங்கள் காவி, நவீனவசதிகளுடன் இனஅழிப்பு விருத்தியடைந்திருக்கின்றது.**

தமிழமக்களின் எதிர்ப்பு உள்ளும் பறமும் உலுப்ப ஆரம்பித்துள்ளது. சூரியக் கந்தைகளை வலியத்தோண்டி, அரசியல் வெற்றி என்ற புதையலைத் தோண்டி எடுத்த சந்திரிகா, இன்று செம்மணியைத் தோண்ட மறுத்தாலும் எதிர்படும் எதிர்ப்பை எதிர்கொள்ள அவரது சமாதானத் தேவதை வேடம் பொருந்துவதாய் இல்லை. காணாமல் போவோர் குறித்து எத்தனைநாள்தான் உலகம் கண்மூடியிருக்கும். சிவில் நிர்வாகத்தை தோற்றுவிக்க வலு ஆவலுடன் அவசரத்துடன் சூரியக்கதிர்களை நடத்திய சந்திரிகா, குடாநாட்டில் தேர்தலையும் நடத்தி மக்கள் பிரதிநிதிகளை கண்டுபிடித்த வெற்றிச் செல்வி, இன்னமும் இராணுவ சிர்வாகத்திலேயே குடாநாட்டை வைத்திருப்பதை எந்த நாடும் பாராட்டப் போவதில்லை.

சமாதானத்தின்பேரால் ஆட்சிக்குவந்த சந்திரிகாவின் ஆட்சி, முன்னைய ஆட்சியாளர்களை மிஞ்சி மிகமோசமான கட்டத்தை அடைந்துவிட்டது. சமாதானத்துக்கான போர் என்று கூறிவந்த சந்திரிகா, சர்வதேச அரங்கில் குற்றவாளியாகி,

**- சுப்பு -**

முகச்சாயம் வெழுத்துவரும் நிலையில், சமாதானப் போர்வையைத் தூக்கி எறிந்துவிட்டு, போர் முழக்கம் செய்துள்ளார்.

அவரின் புதியமுழக்கம் சற்று, முரட்டுத்தனமானது. அதாவது மறைபொருள் இன்றி அது அப்பட்டமாக பயமுறுத்துகின்றது. சமாதானத்துக்கான போர் என, விஷஅம்பை முனையில் இனிப்புத்தடவி வீசிய சத்திரிகா இப்போது நேரடியாகவே விசயத்துக்கு வந்துள்ளார். அதாவது 'போர் என்றால் போர்' என்று அவர் யுத்தமுழக்கம் செய்துள்ளார்.

**அவரின் புதியமுழக்கம் சற்று, முரட்டுத்தனமானது. அதாவது மறைபொருள் இன்றி அது அப்பட்டமாக பயமுறுத்துகின்றது. சமாதானத்துக்கான போர் என, விஷஅம்பை முனையில் இனிப்புத்தடவி வீசிய சத்திரிகா இப்போது நேரடியாகவே விசயத்துக்கு வந்துள்ளார். அதாவது "போர் என்றால் போர்" என்று அவர் யுத்தமுழக்கம் செய்துள்ளார்.**

இனவெறி ஆட்சியாளர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அன்று உரைத்த போர் என்றால் போர் என்ற பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் குரல், இன்று, அந்தப் பேரினவாதத்தின் வழிவழிவந்த இளைய மகளின் குரலாக வெளிவந்துள்ளது.

கறுப்புயூலையை நினைவுகூருகின்ற தமிழர்கள் இந்தக்கால இடைவெளியில், பேரினவாதத்தின் கொள்கை ஒன்றே என்பதையும் நினைவுகூர்வர்.

மாற்றம் என்பது, பேரினவாதம் தன்இனஅழிப்பு நடவடிக்கையை நவீனமயப்படுத்தியுள்ளது என்பதைத் தவிர வேறெதிலும் இருக்கவில்லை என்பதையும் உணர்வர்.

சிங்கள இராணுவக் குண்டர்கள் முப்படைகளாகவும் பொலிஸ்படையாகவும் நவீனப்பட்டிருக்க, தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற பெயரில் சிங்களப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர்கள், இன அழிப்பிற்கு துணை புரிகின்ற விநோதமும் இந்தக்கால இடைவெளியில் நடந்து வருகின்ற புதுமைகள் ஆகியுள்ளன.

83ம் ஆண்டு யூலைத் துயரநினைவுடன், இத்தக்கொடுமைகளில் இருந்து விடுதலை என்ற முழக்கத்துடன், விடுதலை அமைப்புக்களாக தம்மை இனங்காட்டிய தமிழ்க்குழுக்கள் இந்தப் பதினைந்துவருட காலத்தில், சிங்கள அரசாங்கத்திடம் சம்பளம் வாங்கிக்கொண்டு, தமிழினஅழிப்பின் துணைக்குழுக்களாக வலம்வரும் விந்தையையும் மக்கள் வேதனையுடன் நினைவுகூருகின்றனர்.

கதிர்காமர் போன்ற இனத்துரோகிகளின் துணையுடன், தமிழின விடுதலைக்கு எதிரான அனைத்துலகப் பிரச்சாரத்தை மேற்கொண்டு, இனஅழிப்பிற்கு அவர்களின் ஊடாகவே உலகஆதரவு திரட்டும் சந்திரிகாவின் சாணக்கியத்தையும் தமிழ்மக்கள் நினைவு கூருகின்றனர். ★

## அரசின் உள்நாட்டு......

அமைப்புக்கள் என்ற ரீதியில் இவ் அமைப்புக்களின் அறிக்கைகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கணிசமான தாக்கத்தை விளைவிப்பனவாகவே இருந்து வந்துள்ளன.

இந்த வகையில் அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா.சபையின் மனித உரிமைகளின் ஆணைக்குழுவின் 54 வது கூட்டத் தொடரில்கூட சிறிலங்கா அரசின் இன ஒடுக்கு முறையைக் கண்டித்து 54 வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தன.

சில சமயம் மேற்கு ஐரோப்பிய அரசுகள் விரோதமான போக்கை மேற்கொள்ள முயன்றபோதுகூட இவ்வமைப்புக்கள் அவற்றை கண்டனம் செய்யத் தவறவில்லை. இந்த வகையில் ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் 54வது கூட்டத் தொடரில் ஐரோப்பிய கூட்டமைப்பின் சார்பில் பிரித்தானியாத் தூதர் ஓர்ட்றி கிளேவர் அம்மையார் வெளியிட்ட அறிக்கையை அனைத்துலக கல்வி ஒருங்கிணைப்பு அமைப்பு கண்டனம் செய்ததை சுட்டிக் காட்ட முடியும்.

சிறிலங்கா அரசு மனித உரிமைப் பதிவுகளை முனைப்படுத்துவதில்தான் முழுமனதுடன் ஈடுபடுவதாகக் கூறுவதை ஐரோப்பிய கூட்டமைப்பு அப்படியே விழுங்கிவிட்டதாக குற்றம் சாட்டியுள்ள அவ்வமைப்பு சுதந்திர செய்தியாளர்கள் சென்று உண்மை, பொய் சரி பார்க்க முடியாத நிலையில் யாழ்ப்பாணத்திலும் சரி வன்னியிலும் சரி எல்லாமே அமைதியாக இருப்பதாக காட்டுவதாக இருப்பதை ஐரோப்பிய சமூகம் ஏற்றுக் கொண்டதுபோல் இருப்பதாயும் கண்டித்துள்ளது. அத்தோடு சந்திரிகா அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் அரசு ஏமாற்று வித்தை புரிகிறது எனவும் சாடியுள்ளது.

இந்த வகையில் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒருவகையில் மேற்குலகின் அரசியல் சார்ந்த போக்கிற்கு கடிவாளம் இடும் முக்கியமான பாத்திரம் ஒன்றை வகித்து வருகின்றது என்றே கூறுதல் வேண்டும்.

அடுத்து முக்கிய அம்சமாக உள்ளது, இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து மேற்குலகில் வாழ்ந்துவரும் தமிழ் மக்களாகும். இவர்கள் இரண்டு விடயங்களை மேற்குலகத்தவருக்கு உணர்த்திய வண்ணமே உள்ளனர். ஒன்று, சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான இன ஒடுக்குமுறை ஒன்றை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பதாகும். இதற்கு ஆதாரமாக இலங்கையின் வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் இனப்படுகொலைகளையும் ஒடுக்குமுறைகளையும் ஆதாரங்களுடன் அவர்களால் முன்வைக்க முடிகின்றது.

இரண்டாவதாக விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழரின் விடுதலைக்காகவும் உரிமைக்காகவும் போராடும் இயக்கம் என்பதையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்கென வெளிநாடுகளில் அவர்கள் தமிழீழப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவான போராட்டங்களையும் நடத்தி வருவதோடு பொருளாதார ஆதரவும் வழங்கி வருகின்றனர். இந்த நிலையில்தான் சந்திரிகா அரசாங்கம் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிராக மேற்கொண்ட இராஜ தந்திர முயற்சிகளும் பிரச்சார முயற்சிகளும் எதிர்பார்த்த வெற்றி அடையாமைக்கு காரணங்களாகும்.

அத்தோடு சந்திரிகா அரசாங்கம் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்த இரட்டை வழி அணுகு முறையானது தோல்வி அடையும் நிலையில் உள்ளது என்பதையும் ஐரோப்பிய அரசுகள் புரிந்து கொண்டுள்ளன. ஒருபுறம் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை சிறிலங்கா இராணுவத்தினால் வெற்றி கொள்ள முடியாது என்பதையும் மறுபுறம் சந்திரிகா அரசாங்கத்தினால் அதிகாரப் பரவலாக்க திட்டம் ஒன்றை அமுல் செய்ய முடியாது என்பதையும் பெரும்பாலும் ஏற்கத் தொடங்கியுள்ளனர் எனலாம். இந்த நிலையில்தான் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் பிரிட்டனிடம் நட்பு என்ற பெயரில் இரந்து கேட்டுக் கொண்டபோதும் பிரிட்டன் விடுதலைப் புலிகள் விவகாரத்தில் சட்டத்துக்கு மாறான விதத்தில் நடந்து கொள்வதற்கு இல்லை என்ற ரீதியல் நடந்து கொண்டுள்ளது. அதாவது சந்திரிகா அரசின் மூன்றாண்டு வெளியுறவுக் கொள்கை இரந்து கேட்கும் கட்டத்திற்கு சிறிலங்கா அரசினை இட்டுச் சென்றுள்ளது எனலாம். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியிரண்டு

(தொடர்ச்சி)

**யே**ர்மனியருக்கு வயோதிபர்களும் மிகவும் வயது குறைந்தவர்களுமே தேவையாயிருந்தது. வயதானவர்களை விரட்டிக் கொண்டும் குழந்தைகளைத் தேடிக்கொண்டும் யேர்மனியர்கள் வரவும், சேரியைத் திகில் சூழ்ந்து கொண்டது. அதிகமான குழந்தைகள் தங்கள் தாய்மாரின் கரங்களில் இருந்து பறித்தெடுத்துச் செல்லப்பட்டனர்.

சுற்றி வளைக்கப்பட்ட அனைவரும், உம்லாக் பிளாற்ஸ் இல் கூட்டப்பட்டு, நீண்ட சரக்கு வண்டிகள் ஆயத்தமாகக் காத்துக் கொண்டிருந்த ஸ்ராவ்கி வீதி புகையிரதப் பாதையருகே கொண்டு செல்லப்பட்டனர். அதிர்ச்சியடைந்த திகைப்படைந்த மக்கள் வந்து குவியத் தொடங்கினர். பிள்ளைகளுக்காக அவதிப்பட்ட பல பெற்றோர்கள், துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஜெர்மனியர்கள் பல தடவைகள் கொல்வதற்காகவே துப்பாக்கியால் சுட்டனர்.

பிள்ளைகள் பாடிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தனர். யேர்மன் காவலாளிகள் அவர்களைக் கிராமப்புறத்துக்கு ஒரு உல்லாசப் பயணம் அழைத்துச் செல்லப் போவதாக உறுதி கூறியிருந்தனர். அவர்களில் அதிகமானோர் சேரிக்கு வெளியே போயிருக்கவில்லை. ஆதலால் அவர்கள் வாழ்வில் இது முக்கிய நிகழ்வாகும்.

இந்தப் புகையிரதத் தொடர் ட்ரெப்லிங்கா நோக்கி அசைந்தபோது 'இறுதித் தீர்வு' நெருங்கியிருந்தது.

**ரிஸ்யா பியாப் – 1942.**

இரண்டு வாரங்களுக்குப் பின் டொவ் லண்டவ், சப்றொவ்ஸ்கா 99 இல் இருந்த வன்டாவின் வீட்டிலிருந்து திகைப்பூட்டும் செய்தியொன்றோடு வந்திருந்தான். அந்தச் செய்தியில் ரிஸ்ஸா பியாப் அன்றும், பின் தொடர்ந்த ஐந்து சுற்றிவளைப்புகளிலும் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் எல்லோரும் ட்ரெப்லிங்கா என்னும் இடத்தில் விசவாயு அறைகளில் கொல்லப்பட்டார்கள் என்பது குறிப்பிடப்பட்டிருந்தது. போலந்தின் மற்றைய சேரிகளில் இருந்து வந்த செய்திகள், வேறு இப்படியான முகாம்களும் இருப்பதை அறிவித்தன. கிராக்கோவ் (Crackow) பகுதியில் பெல்செக் (Belzec), செல்ம்னோ (Chelmno) ஆகிய முகாம்களும், லுபின் (Lubin) நகரமருகே மெயிடனக் (Maidanek) முகாமும் இயங்கிக் கொண்டோ, இயங்க ஆயத்தமாகிக் கொண்டோ இருந்தன. இன்னும் மேலதிகமாக ஒரு டசின் முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதுபோல் தெரிவதாக அந்த அறிக்கைகள் குறிப்பிட்டன.

விசவாயு அறைகளில் தொகையாகக் கொலை செய்வதா? அது நடக்கக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை. மண்டெக் மீட்பாளர் குழுத்தலைவன் என்ற கோதாவில் மற்றைய சியோனிஸ்ட் குழுக்களுடன் கலந்தாலோசித்து, யூதர்களைப் பொதுவாக எழுச்சி கொள்ளவும், சுவரைக் கடந்து வெளியேறவுமான கூட்டுப் பணிப்புரை ஒன்றை விடுத்தனர்.

இந்தப் பணிப்பு, உணர்ச்சி உந்துதலில் விடுக்கப்பட்டதே தவிர, பிரயோகிக்கக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை. எதிர்த்துச் சண்டையிடுவதற்கு யூதர்களிடம் ஒன்றும் இருக்கவில்லை.

இதைவிடக் கட்டாய சேவை பட்டாலியன்களின் அடையாள அட்டைகள் வைத்திருந்த ஒவ்வொருவரும் சீவித்திருப்பதற்கு அதுதான் ஒரே மார்க்கம் எனக் கருதிக் கொண்டிருந்தனர்.

இங்கு ஒரு எழுச்சியை நிகழ்த்த முடியாததற்குக் காரணம் சேரி தவிர்ந்த வெளியிடங்களில் அதற்கு ஆதரவு இல்லாதிருந்ததே. பிரான்சின் விச்சி (Vichy) அரசானது பிரெஞ்சு யூதர்களைக் கையளிக்க வேண்டும் என்ற யேர்மன் பணிப்புரையை முற்றாக நிராகரித்திருந்தது. ஒல்லாந்தில் எல்லோரும் ஒருமித்து தங்கள் நாட்டு யூதர்களை ஒளித்து வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வோடிருந்தனர். டென்மாக்கில், அரசர், யேர்மனிய கட்டளைகட்கு அடிபணியாததோடு, டென் மார்க்கியர்கள் தங்கள் நாட்டின் முழு யூத குடி மக்களையும் சுவீடன் நாட்டுப் பாதுகாப்புக்குள் அனுப்பி விட்ட னர்.

போலந்து மக்கள் இனப் படுகொலைகளுக்குச் சம்மதம் தெரிவிக்காவிட்டாலும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. சிலர் இதை ஒத்துக் கொள்ளாவிட்டாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. மிகச் சில போலந்துக்காரர்களே தப்பிய யூதர்கட்குப் புகலிடமளித்தனர்.

யூத சேரியினுள்ளே அமைக்கப் பட்டிருந்த ஒவ்வொரு குழுவும் வெவ்வேறு சித்தாந்தங்களைக் கைக்கொண்டனர். மத சார்பானவர்களும், தொழிற் சங்கக்காரரும் வாதாடிக் கொண்டனர். யூதர்களுக்கு விவாதம் செய்வதென்றால் நல்ல விருப்பம். சேரி வாழ்க்கையில் வாய்ச் சண்டையிடுவதும், விவாதம் செய்வதும் எப்போதுமே விருப்பமான பொழுது போக்குகளாகும். ஆனால் இப்போதோ பேரழிவின் காலம் வந்துவிட்டது. மண்டெக்கின் மீட்பாளர் குழுவும், மற்றைய பலதரப்பட்ட குழுக்களும் இணைந்து ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட தலைமையை நிறுவினர். இப்படியாக ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பு ஸட்.ஓ.பி. (Z.o.b) என்ற முதலெழுத்துக்களைக் கொண்டு விளங்கியது. மற்றைய யூதர்களை காக்கும் மகத்தான பொறுப்பும் இதற்கு இருந்தது.

சப்றொவ்ஸ்கா 99இல் இருந்த வன்டாவின் வீட்டுக்கு ஒன்றுக்குப் பின் ஒன்றாக டொவ் பயணங்களை மேற்கொண்டிருந்தான். கழிவு வாய்க்கால்களூடான ஒவ்வோர் பயணத்தின் போதும், உதவியும் ஆயுதங்களும் கேட்பதான ஸட்.ஓ.பி.யின் வேண்டுகோள்களை போலந்து தலைமறைவுப் போராளிகட்கு கொண்டு சென்றான். ஆனால் அதிகமான செய்திகள் பதிலேதுமில்லாமலே போயின. கிடைத்த பதில்களும் தட்டிக்கழிப்பன போலிருந்தன.

அந்தப் பயங்கரமான முதுவேனிற்காலம் முழுவதும் யேர்மனியர்கள் தொடர்ந்து ரெப்லிங்காவுக்காக யூதர்களைச் சுற்றிவளைத்துச் சென்றனர். ஸட்.ஓ.பி.யோ முற்றான அழிவைத் தவிர்க்க இயன்ற முயற்சிகளை எடுத்து வந்தனர்.

புரட்டாதி மாத முற்பகுதியில் ஒருநாள். ஒரு ஆபத்தான பயணம் ஒன்றை டொவ் வார்சோவிற்குள் மேற்கொண்டான். வன்டாவின் வீட்டை விட்டு கிளம்பிய பிறகு, நாலு குண்டர்கள் இவனைக் கண்டு, ஒரு சந்தினுள் விரட்டி வந்து யூதனல்ல என்று காட்டும் அவன் அடையாளப் பத்திரங்களைக் காட்டக் கட்டளையிட்டனர். டொவ்வுடைய முதுகு குறுக்குச் சுவரோடு ஒட்டிக் கொண்டிருந்தது. அவர்கள் மிக அருகில் நெருங்கியதும் தான் கையோடு எடுத்து வந்திருந்த கைத் துப்பாக்கியால் ஒருவனைச் சுட்டுக் கொன்றுவிட்டு மற்றவர்களைப் பயத்தால் ஓடப் பண்ணினான். பின்பு பாய்ந்தோடிச் சென்ற அவனைக் கழிவு நீர் வாய்க்காலின் பாதுகாப்பு அரவணைத்துக் கொண்டது.

'மீட்பாளர் குழு' தலைமையகத்தின் அப் பையன், காலந் தாழ்த்திச் செயல்படும் அதிர்ச்சியால் அழத் தொடங்கினான். மண்டெக் அவனைத் தேற்ற முயற்சித்தான். தன் சகோதரன் அருகில் பாசத்தையும், மகிழ்ச்சியையும் எப்போதுமே டொவ் உணர்ந்திருக்கிறான். மண்டெக் இப்போது இருபத்தொரு வயதானவனாக இருந் தாலும், மெலிந்தும், எப்போதும் களைப்படைந்த தோற்றத்துடனும் காணப்பட்டான். அவன் ஒரு நல்ல தலைவனாகச் செயல்பட்டு வந்ததோடு, எல்லையை மீறி தான் அளவுக்கு மீறிக் களைப்படைந்து போகும்வரை வேலை செய்து வந்தான். அவன் மீட்பாளர் குழுவைச் சிதறவிடாமல் வைத்திருந்ததோடு, அவர்களின் போராட்ட உணர்வுகளை மழுங்க விடாமலும் பார்த்துக் கொண்டான். இரண்டு சகோதரர்களும் மெதுவாகக் கதைத்துக் கொண்டனர். டொவ் அமைதியடைந்தான். மண்டெக், டொவ்வின் தோளை அரவணைத்தபடி இருவருமாகத் தங்கள் வீட்டை நோக்கிப் போயினர்.

சில வாரங்களில் வரவிருந்த ருத்தின் குழந்தையைப் பற்றி மண்டெக் இப்போது கதைத்தான். மாமாவாகப் போவது எவ்வளவு உன்னதமான வாய்ப்பு என்பது பற்றியும் அவன் டொவ்வுக்குக் கூறினான். மீட்பாளர் குழுவின் எல்லா அங்கத்தவர்களும் அந்தக் குழந்தைக்கு மாமாமாரும் மாமிமாருமாக இருப்பார்கள். ஆயினும் டொவ்தான் உண்மையான மாமாவாக இருப்பான் என்றும் கூறினான். ★

**லியோன் யூரிஸ்**



தொடரும்...

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் ஆழ்நத கருத்துள்ள கவிதைகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் ஆக்கங்களை **21 - 08 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## கருகிய மலர்களே......

**கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:**
**'Kalathil',**
**Eelam House, 202 Long Lane, London SE1 4QB.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

எமது தாயகம் - தமிழீழத் திருமேனி சிங்களப்படைகளால் கொலைக்களமாக மாற்றப்பட்டுள்ளது. புதை குழிகளுள் உயிருடனும். கொலை செய்யப்பட்டும் நூற்றுக் கணக்கில் எம் உடன் பிறப்புக்கள் அநியாயமாக அழிக்கப்பட்ட செய்தி கேட்டு துடித்துக் கொண்டிருக்கும் எம் உள்ளங்கள் மேலும் மேலும் வேதனைப்படக் கூடிய வகையில் இன்றும் எம் உடன்பிறப்புக்கள் தினம் தினம் இனக்கொலைகளுக்கு ஆளாகும் செய்திகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளது.

யாழ் ஆனைக்கோட்டைப் பகுதியில் 18 வயதான சிவசுதா மேரி அன்ரோனிற்றா என்ற பெண் பிரசவத்திற்காக வைத்தியசாலைக்கு ஆடி 18ம் திகதி இரவு 10 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். ஆனால் சாவற்காடு சோதனைச் சாவடி இராணுவத்தினர் அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்படுவதை மறுத்துவிட்டனர். இதனால் அருகில் உள்ள வீடொன்றில் ஞாயிறு அதிகாலை 1.30க்கு பெண்குழந்தையைப் பிரசவித்த இவரை ஞாயிறு பகல் வைத்திய சாலைக்கு எடுத்து செல்ல சிறிலங்கா படையினர் அனுமதித்தனர். காலதாமதமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதினால் சிவசுதா மேரி அன்ரனிற்றா சிறிது நேரத்தில் காலமானார்.

பலாலியில் இருந்து பாதகச் சிங்களப் படைக்கு அஞ்சி இடம்பெயர்ந்து பொலிகண்டியில் தனது குடும்பத்துடன் வசித்து வந்த 33 வயதான றொபேர்ட் வெலிங்டன் என்னும் தமிழ்ப் பொது மகன் இவ் ஆடி மாதம் 19ம் திகதி நெல்லியடிக்கும் மந்திகைக்கும் இடைப்பட்ட மடத்தடி இராணுவச் சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டார். ஆனால் வழமை போல் சிங்களப்படையினர் இவரையும் சுட்டுக் கொலை செய்து அழித்தொழித்துள்ளனர்.

தென் தமிழீழத்தில் திருக்கோவிலில் காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற தம்பாட்டியைச் சேர்ந்த 27 வயதான இளையதம்பி செல்வராஜாவை ஆடி 20ம் திகதி முதல் காணவில்லை. இவரைச் சுட்டுக்கொன்ற சிங்களப்படையினர் இவரின் உயிரற்ற உடலை அக்கரைப்பற்று வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். இதற்கிடை அம்பாறை மாவட்டத்தில் 7 தமிழ் பொது மக்கள் காணாமல் போயுள்ளனர். விறகு வெட்டக் காட்டுக்குச் சென்ற இவர்களும் இரு மாதங்களுக்கு முன் இதேபகுதியில் விறகு வெட்ட காட்டுக்குச் சென்ற பொதுமக்கள் இருவர் சிறிலங்காவால் கொல்லப்பட்டதைப் போல கொல்லப்பட்டிருப்பார்கள் என்ற அச்சத்தை இவர்களுடைய கிட்டிய உறவினர்களிடை தோற்றுவித்துள்ளது.

நெடுங்கேணியில் வீடுகளைப் பார்த்து வரவும் அங்கு விட்டுவந்த தமது பொருட்களில் சிலவற்றை எடுத்து வரவும் என சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளில் உள்ள தமது வீடுகளுக்குப் போன 45 வயது சுப்பிரமணியம் செல்வநாயகம். 42 வயதான பழனிச்சாமி நாகேந்திரம் ஆகியோர் ஆடி மாதம் 16ம் திகதி காணாமல் போயுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்று பிள்ளைகள் உள்ளனர். இதற்கு நான்கு தினங்களுக்கு முன்னரும் இப்பகுதிகளில் இதே மாதிரி வீடு பார்க்கச் சென்ற 31 வயதான வைரமுத்து கோபாலகிருஷ்ணன். 22 வயதான சண்முகராசா ஜெயச்சந்திரன் ஆகியோரும் காணாமல் போயுள்ளனர்.

அம்பலாந்துறை கலைமகள் வித்தியாலயத்துக்கு படிக்கச் சென்ற 20 வயதான ரி. சிதம்பரப்பிள்ளை. 18 வயது வி.தவராஜா. 20 வயது எஸ்.குணராஜா 17வயது சி.மகேந்திரன் ஆகிய நான்கு மாணவர்கள் ஆனி மாதம் 29ம் திகதி முதல் காணாமல் போயினர். இவர்கள் குறித்த தகவல்களை சிறிலங்காப் படையினரிடமிருந்து பெறமுடியாமல் இவர்களின் கிட்டடிய உறவினர்கள் துடியாய்த் துடித்தனர். அதுவும் கொக்கட்டிச் சோலை இனஅழிப்புக்களின் பின்னர் தமிழ் மக்கள் பெரும் அச்சத்துடனேயே இப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். தற்பொழுது மாணவர்கள் நால்வரும் புலுகுணாவையில் உள்ள சிறிலங்கா அதிரடிப் படையினரால் கைதாக்கப்பட்டு மகாஓயா சிறிலங்காப் பொலிஸில் வைக்கப்பட்டுள்ள செய்தி தெரியவந்துள்ளது.

தமிழ் மக்கள் மேலான இராணுவ முற்றுகைகள் நலன்புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை தற்கொலை மனோபாவத்திற்கு இட்டுச் செல்லும் அபாயத்தை உருவாக்கி வருகிறது. தென் இந்தியாவில் இருந்து தன் ஊருக்குப் போகவென வந்த தமிழ்ப் பெண் ஒருவர் திருகோணமலை அலெக்ஸ் தோட்ட தடுப்பு முகாமில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டதினால் மனமுடைந்து தற்கொலை செய்துள்ளார். இது போன்ற தற்கொலைகள் வவனியா தடுப்பு முகாங்களிலும் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன.

சிங்கள இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்ட தன் மகன் சித்திரவதை தாங்க முடியாமல் நஞ்சருந்தி தற்கொலை செய்ததைக் கேள்வியுற்று துடிதுடித்த அவரின் தாயாரான கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தை சேர்ந்த இராசேந்திரம் மகேஸ்வரி ஆழமான கிணற்றில் குதித்து தற்கொலை செய்துள்ளார்.

இதற்கிடை வவனியாத் தடுப்பு முகாமில் உள்ள 20 தமிழ் இளைஞர்கள் இளம் பெண்களை கைதாக்கி மேலதிக விசாரணைக்கென தமது இராணுவ முகாங்களுக்கு கொண்டு சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் பின்னர் இவர்களுக்கு என்னவாயிற்று எனக் கூற மறுத்துள்ளனர்.

இதற்கிடை இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறுவதும் சிறிலங்காவால் திட்டமிட்ட முறையில் தடுக்கப் பட்டு வருகிறது. யாழ் குடாநாட்டில் 44 கிராமசேவகர் பிரிவுகளில் இவ்வாறு மக்கள் மீளக்குடியமர்வது சிறிலங்காவால் தடைசெய்யப்பட்டுள்ளது. அரியாலை கிழக்கைச் சேர்ந்த 150 குடும்பங்கள் மீளக்குடியேற அனுமதி மறுக்கப்பட்டதினால் வீதியோரங்களிலும் தாழ்வாரங்களிலும் வசித்து வருகின்றனர்.

இதே நேரத்தில் துன்புறும் தமிழ் மக்கள் குறித்து செய்திகள் வெளிவராதவாறு பத்திரிகைத் தணிக்கையினை அறிமுகம் செய்த சந்திரிகா அரசாங்கம். அப்பத்திரிகை தணிக்கைக்கு கட்டுப்பட்ட நிலையில் கடமையாற்றி வந்த வீரகேசரி பத்திரிகையாளர்கள் இருவரை தனது படையினரைக் கொண்டு அநியாயமாகக் கைதாக்கி தமது இராணுவ வதை முகாமுக்கொண்டு சென்று கைதிகளாக வைத்துள்ளனர்.

இவ்வாறாக போரினால் மட்டுமல்ல தினம் தினம் எல்லா வழிகளினாலும் தமிழ்மக்கள் சிங்களப் படைகளினால் இனஅழிப்புகளுக்கும் இனச் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்பட்டு வருகின்றனர். இதிலிருந்து எம் உடன் பிறப்புக்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டுமானால் இந்த ஆக்கிரமிப்புச் சிங்களப் படை எமது தாயகத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்டேயாக வேண்டும். அதற்கு உரிய பங்களிப்புக்களைச் செய்வதன் மூலமே புலம் பெயர் தமிழர்களாகிய நாம் நம் மக்களின் துயரைத் துடைப்பதில் பங்குபற்ற முடியும்.

அன்பின் ஆசிரியர்.




எல்லோரும் ஒன்றாக
ஓரணியில் நின்றுவிட்டால்
எம்வீட்டு முற்றத்தில் எதிரியவன் கால்படுமா
எல்லாளன் வழிவந்த எம்தலைவன் அணிதிரண்டால்
சொல்லாமல் ஓடிடமாட்டாரா சிங்களப் படையினர்
வெற்றியை எமதாக்க
எல்லோரும் ஒன்றாக
ஓரணியில் திரண்டிடுவோம்!

**- செ. தமிழினியன் யேர்மனி.**

எம் இனத்திற்கு என்று ஒரு நாடு இல்லை
எம் சந்ததிக்கு எதிர்காலமில்லை
என்றும் அடிமையா எம் வாழ்வு
ஏதிலியாய் அலையும் எம் இனமே
எமக்கு வேண்டும் ஒரு நாடு
எம் சந்ததிக்கு வேண்டும் எதிர்காலம்
எம் தலைவனின் தானையில் புறப்படுங்கள்
எல்லோரும் ஒன்றாக ஈழம் அது நிஜம்.

**- வயவையூர் சு. உமாசுதன் யேர்மனி.**

ஆயிரமாயிரம் குண்டுகளைப் பொழிந்து
உயிர்குலைகள் படுகுழிக்குள்
அன்னை மடிதிறந்து அவதரித்த குழந்தையும்
பயங்கரவாத சட்டத்தின் சிறைக்குள்
உண்ணஉணவின்றி நோய்க்கு மருந்தின்றி
அவசரமாய் போனஉயிர்கள்
நாமென்ன செய்தோம் தமிழுக்காய் இன்றே
எல்லோரும் ஒன்றாக இணைந்திடுவோம்.

**- திருமதி சாரதாதேவி மகேந்திரன் யேர்மனி.**

## எல்லோரும் ஒன்றாக.....

கூலிக்கு மாரடிக்கும் கும்பல் எங்கே
பதவிக்காகப் பல்லிளிக்கும் கூட்டம் எங்கே
தம்முறவுகள் படும் துன்பம் கண்டும்
கிஞ்சித்தும் உணர்வில்லாத் தமிழன் எங்கே
பிறர்படும் துன்பம் கண்டு
உணவின்றி உறக்கமின்றி–உயிரும் துச்சமாய்கருதி
போர்க்களம் புகுந்த புலிவீரர் தியாகத்திற்கு
எல்லோரும் ஒன்றாக தலைவணங்குவோம்.

**- ஆன் கிறிஸ்ரின் பிரான்ஸ்.**

எல்லோரும் ஒன்றாக இழுத்தாலே தேர் உருளும்
சில்லுக்கு ஓரிருவர் கிடைஇடினும் தடை நேரும்
மல்லுக்கு வந்தவர்கள் மல்லால்தான் மடங்கிடுவர்
பல்லுக்காட்டிப் பணிந்தால் பரம்பரைக்கே பெருநாசம்
வெல்வோம் எனநம்பி வேற்றுமைகள் நாம்விடுத்து
அல்லும்பகலும் அனைவருமாய்க் குறிநோக்கிச்
செல்வோமாகில் விரைவில் சுதந்திரமாய் வாழ்ந்திடலாம்
நல்லுறுதி நெகிழாமல் நோற்றிடுவோம் எம் தவத்தை!

**- கோமதி முருகப்பன் இங்கிலாந்து.**

தாரணியில் இல்லை தமிழனுக்குத் தனிநாடு
ஓரணியில் ஈழத்தில் தமிழர்படை உண்டு
இருபத்து ஆண்டுகள் ஈழப்போர் தொடர்கிறது
பிரபாகரன் பெருமை பேசப் பெரியது
அவன் கரங்கள் உயர்ந்திடவே வாரிவாரி வழங்கி
புலம் பெயர்ந்தோர் எல்லோரும் ஒன்றாகி
வரலாறு எழுதுவோம்.

**- காவலூர் செ. கணபதிப்பிள்ளை யேர்மனி.**

www.tamilarangam.net



# ஓராண்டு ஜெயசிக்குறு உணர்வின் சில துளிகள்

சத்தியன் எழுதிய உணர்வுகள்

## 1

**13-04-98** புதன்கிழமை காலை கொட்டிய மழை நின்றிருந்தது. நாயாற்றிலிருந்து தொடங்கி முள்ளியவளை வற்றாப்பளை ஊடாக புதுக்குடியிருப்புக்கு வந்திருந்தது மரதன் ஓட்டம்.

மரதனோட்ட வீரர்களின் கைகளினூடு வந்திருந்த கொடிகளும் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப் படமும் இன்னுமொரு தொகுதி மாணவர்களின் கைகளுக்கு மாறி பரந்தன் வீதி வழியே பயணித்துக் கொண்டிருந்தன. வீதியின் இருமருங்கும் கூடி நின்றவர்களின் ஆர்ப்பரிப்பு. அந்த உணர்வுகள் அனைத்தும் கை மாறி மாறிச் செல்லும் கொடிகளில் பொதிந்து களத்தில் நிற்கும் எம் பிள்ளைகளுக்குச் செல்வதான உணர்வெழுச்சி.

மாணவர்கள் மட்டும் ஓடிக்கொண்டிருந்த மரதனோட்டத்தில் திடீரென ஒரு பெண்மணியும் இணைந்து கொண்டார். பொங்கும் உணர்வெழுச்சியைச் சமன் செய்ய முடியாத அவர் தானும் ஒருவராய்ப் புகுந்து ஓடத் தொடங்கினார்.

## 2

தர்மபுரத்திலிருந்து கல்மடு நோக்கி கொடிகளும் தலைவரின் உருவப்படமும் பயணிக்கின்றன. தலைவரின் படத்தைத் தாங்கி ஓடி வரும் மாணவி தளர்ந்திருந்தாள். அவளின் தளர்வை அவதானித்த ஓர் போராளி படத்தை அவள் தவறவிட்டு விடுவாளோ எனப் பயந்தவராக அருகே சென்றார். அந்தத் தளர்வின் நடுவிலும் முகமலர்ந்த அந்த மாணவி சொன்னாள், நான் கவனமாகக் கொண்டு வருவன். சொன்னவள் கல்மடுப் பாடசாலை வரையும் தலைவரின் படத்தை விடவுமில்லை, கை மாற்ற அனுமதிக்கவுமில்லை.

## 3

இராமநாதபுரத்தை நோக்கிய பயணம் இப்போது, கொடிகளையும் படத்தையும் இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் அவற்றை தாங்கி ஓடிவந்தவர்களுக்கு அந்த மனநிலை இல்லை. தாங்களே அவற்றை வைத்துக் கொள்ளத் துடிக்கும் உணர்வு.

பல போராளிகள் இதமாய்க் கதைத்து.. .. .. தலைவரின் படத்தை பல தடவைகள் முத்தமிட்ட பின்னரே அவர்கள் தங்களிற்காக காத்திருந்தவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

## 4

ஒவ்வொரு பாடசாலைக்கும் கொடிகள் கைமாறியபோதும் மூன்று தரிப்புகளில் தொடர்ந்து ஓடிக் கடந்திருந்த அவன். அந்தக் களம் நோக்கிய உணர்வுப் பரிமாற்ற மரதனோட்டத்தில் தொடர்ந்தும் பங்கு கொள்ளத் துடித்தான். கொடியொன்றை இறுதி வரை தாங்கி விரைந்தான். இராமநாதபுரத்தில் ஒழுங்கமைப்புக்கான போராளியிடம் கேட்டான். இன்னுமொரு வாய்ப்பை அவன் பறித்துக் கொள்ளக் கூடுமாதலால் கொடியை வாங்காமல் சாதாரணமாகத் தொடர்ந்து ஓடும்படி அவனுக்குக் கூறப்பட்டது. அவனும் ஓடினான்.

## 5

**13**ம் திகதி மாலை. கண்டிப் பெருந்தெரு. ஒரு வருடமாகப் பகைவன் விழுங்க முனையும் அந்தத் தெரு.

வெங்களத்திலிருந்து சில மைல்கள் முன்னாடி திரண்டிருந்தனர் தளபதிகள், போராளிகள். உணர்வுகளைக் காவி, சுமந்து, கிளர்ந்து வரும் உறவுகளிடம் உணர்வுகளைப் பெற்றுக் கொள்ள.

களத்திலிருந்து வந்தவர்களும் களம் நோக்கிப் போனவர்களும் ஒன்று கலந்த உணர்வு வெள்ளம். தளபதி பானு உரையாற்றுகிறார். சண்டையில் காயமடையும் ஒரு போராளி, தன் காயம் முழுமையாக குணமடையும் முன்பே திரும்பக் களம் புகுவதை சொல்லும்போது தன்னையும் மீறி அழுதுவிட கூடி நின்ற மக்களும் விம்மி அழ... கண்டிப் பெருந்தெரு சிலிர்த்தது. மக்களும் தளபதிகளும் நினைத் தெழுந்த உணர்வை வீசிய காற்றெடுத்துச் சென்றது, அம்பகாமத்திலிருந்து மூன்று முறிப்பு வரை கண்விழித்துக் காவலிருக்கும் போராளிகளிற்கு.

## 6

புதன்கிழமை மாலை. தர்மபுரம். இடம்பெயர்ந்து இயங்கும் முருகானந்த மகா வித்தியாலய மைதானம்.

மாபெரும் மக்கள் கூட்டம். புகைக்குண்டுகள் மேலெழ, பரா லைற்றுக்கள் "உஸ்" எனப் பறக்க களைகட்டியிருந்தது மகிழ்ச்சி ஆரவாரம். இனம் புரியாத, காற்றில் புகைக் கூட்டைப் போலவே மேலெழும் துடிப்பு. ஒரு ஆசிரிய நண்பர் சொன்னார், இண்டைக்குத்தான் உங்களுக்குத் தீபாவளி. நான் வழமையா ஒரு பண்டிகையையும் கொண்டாடுறதில்ல. ஆனா இண்டைக்கு புது உடுப்பெல்லாம் எடுத்தனான்.

ஆயிரத்து முந்நூறு பிள்ளைகளின் உயிரின் குருதியில் ஈட்டிய வெற்றி மக்கள் மனதில் எழுப்பிய உணர்வின் எழுச்சியின் சில துளிகள் இவை. இவை சொல்வது என்ன? வெற்றி எமதே என்பதல்லவா!